விபிஎஸ்

ஏறுதல்

உயர எழும்பு

மேலே ஏற கீழே இறங்கு. மத்தேயு 10:39

இயக்குநர் கையேடு

இலக்கிற்கு வரவேற்கிறோம்!

ஒரு குழந்தையிடம் 'நீ வளர்ந்து பெரியவனாகும்போது எவ்வாறிருக்க விரும்புகிறாய்?' என்று எத்தனை முறை கேட்டிருப்பீர்கள்? நாம் எவ்வாறிருக்க வேண்டும் என்பது பற்றி நம்மனைவருக்கும் கனவுகள் உண்டு. நாம் ஏதாகிலும் பெரிய காரியம் செய்யும்படி தேவன் நம்மை பயன்படுத்துவார் என நாம் நம்புகிறோம். பள்ளியிலோ, சபையிலோ, அரசியலிலோ, மருத்துவத்துறையிலே, நஷ்டத்தில் ஓடும் ஸ்தாபனத்திலோ தேவன் நம்மை பயன்படுத்தலாம். ஒவ்வொரு துறையிலும் தேவனுக்குத் தகுதி வாய்ந்த மக்கள் தேவை. அவர்களில் ஒருவராய் நாம் இருப்போம் என நம்புகிறோம். தேவன் நம்மை பயன்படுத்துவார் என நாம் கனவு காண்பதுபோல் நமது சபைகளிலும், சமுதாயத்திலும் நமது குழந்தைகளும் அவ்வாறே கனவு காண்கின்றனர். தங்கள் வருங்காலத்தில் எவ்வாறு இருப்போம் என கனவு கண்டு அதை நம்புகின்றனர். தேவன் தங்களைக் குறித்த பெரிய திட்டங்களை வைத்துள்ளதாகக் கனவு காண்கின்றனர். தேவன் பெரிய திட்டங்களை அவர்கள் வாழ்க்கையில் வைத்துள்ளார் என்பது ஒரு நல்ல செய்தி. அநேகர் தவறிழைத்து அவர்களைப்பற்றிய தேவனுடைய சிறந்த திட்டங்களை இழந்து போகின்றனர் என்பது துர்ச்செய்தியாகும். இந்த விடுமுறை வேதாகமப் பள்ளியானது உங்கள் சமுதாயத்திலுள்ள எந்த சிறுவரும் விடுபட்டுப் போய்விடாதபடி தேவதிட்டத்தில் நிலைத்திருக்கவும், தங்கள் வாழ்வில் ஏதோ பெரிதானக் காரியங்களைக் காணவும் உதவும். அதற்கு மலையில் ஏறுவதுபோல உயரச் செல்ல மனவிருப்பமும், மனதைரியமும் பெலனும் தேவை. இந்த ஆண்டு விடுமுறை வேதாகமப் பள்ளியில் நமக்கென்றுள்ள சிறப்புச் செய்தியாளர் தமது செய்தியைச் சிறுவருடன் பகிர்ந்து கொள்வார். நமது சிறப்பு விருந்தினர் யோசேப்பு. தேவன் தன்னைப் பெரிய காரியங்கள் செய்ய பயன்படுத்துவாரென கனவுகண்ட இளைஞர் இவர். எப்படியெனில் உலகின் வல்லமையான மக்களுள் ஒருவராக விளங்கவிருந்த இவர் முதலில் ஒரு அடிமையானார். யோசேப்பு மலையேற வந்த வழி அவரைக் கீழாகக் கொண்டு சென்றது. நமது வாழ்விலும் தேவனுடைய வேலை இவ்விதமாகவே உள்ளது. மலை மேலேறுவது உண்மையிலேயே கீழ்நோக்கிச் செல்வதாகும். யோசேப்பின் வாழ்வில் அதுவே நடந்தது. எனவே பயம் வேண்டாம். நாம் எங்கேயோ செல்வது போலவும் பின்நோக்கிச் செல்வது போலவும் தோன்றினாலும் தேவன் நமது வாழ்வில் பெரிய திட்டங்களை வைத்துள்ளார். நாம் அவருக்கு விட்டுக் கொடுக்கும்போது அவர் நம்மை நடத்த முன் வருகிறார். 'தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் காப்பான்' மத்தேயு 10:39. நாம் நமது வாழ்க்கையை அவருக்கு கொடுக்கும்போது நாம் கீழே போவது போல் தோன்றினாலும் நாம் மேலேறுவோம். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? உங்கள் மாணவரை மலை மேலேறும் சாதனை நிகழ்த்த அழைத்துச் செல்ல விரும்புகிறீர்களா? நாம் பனிச் சறுக்குச் செய்வதுபோல பாவனை செய்வோம். கைவினைத் திறன்களைக் கற்றுக் கொள்ளும்போதும், பனியில் உறைதல் விளையாட்டுகளை விளையாடும் போதும், சிற்றுண்டி வேளையிலும், தங்கள் கைத்திறனைக் காண்பிக்கும்போதும் உங்கள் சிறுவர்கள் மகிழ்ச்சியடைவார்கள். தங்கள் மணிக்கட்டில் சுற்றிக் கட்டப்பட்ட வசனம் எழுதிய அட்டைகளுடன் வீடுகளுக்குச் செல்லும்போது தங்கள் வகுப்பில் கற்றுகொண்டதை தங்கள் பெற்றோருடன் இலகுவாகப் பகிர்ந்து கொள்வார்கள். இந்த விடுமுறை வேதாகமப்பள்ளி புதிய முறையை அறிமுகம் செய்வதால் உங்கள் பிள்ளைகளின் மனக்கண்கள் திறக்கும். இந்த விடுமுறை நாட்களை 'இலக்கு' என்ற தலைப்புடன் பயணம் செய்வோம். பனி குளிரைக் கொண்டு வருவதுபோல் பாவனை செய்யுங்கள். நீங்கள் உறைந்து போவதால் சோர்வடையலாம். ஆனால் முழு சபையும் மேலேறுவதால் அது மகிழ்ச்சியைக் கொடுக்கும்!

www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

கருப்பொருள் வசனம்:
"தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் காப்பான்" மத்தேயு 10:39.

பொருளடக்கம்

இலக்கிற்கு வரவேற்கிறோம்	1
முன்னுரை	2
மதிப்பீடு	3
பாடங்களை எவ்வாறு பயன்படுத்துதல்	5
சுழல்முறைப் பயிற்சி நிலை	7
கூடுதலான கருத்துக்கள்	9
பாடம் 1	11
பாடம் 2	17
பாடம் 3	23
பாடம் 4	29
பாடம் 5	35
பயிற்சி புத்தகங்கள் இலக்கு	41



சிறுவர்கள் முக்கியமானவர்கள்

CHILDREN ARE IMPORTANT

www.ChildrenAreImportant.com

இலக்கு "சிறுவர்கள் முக்கியமானவர்கள்" என்ற நிறுவனத்தினால் எழுதப்பட்டிருக்கிறது. எங்களுக்கே அனைத்து உரிமையும் உள்ளது. எங்களுடைய அனுமதி இன்றி, எங்களுடைய பொருட்களை இலவசமாக இணையத்தளத்திலிருந்து எடுத்து, இலவசமாக உபயோகித்து, இலவசமாக அச்சிட்டுஇலவசமாக மற்ற திருச்சபைகளுக்கும் ஊழியங்களுக்கும் கொடுக்கலாம்.
நீங்கள் சிறுவர்களின் வாழ்க்கையை மாற்ற இருக்கிறீர்கள். நாங்கள் உங்களுக்கு உதவ இருக்கிறோம்!
மேலும் விபரங்களுக்கு எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்:

info@childrenareimportant.com or 01-52-592-924-9041

எல்லாவேதாகம வசனங்களும் தமிழ் O.V. ல் இருந்து எடுக்கப்பட்டது. முழு
குழுவிற்கும் நன்றி!
ஆசிரியர்: Kristina Krauss
Creative Team: Dwight Krauss, Mike Kangas, Vickie Kangas, Rubén Darío, Suki Kangas, Verónica Toj and Jetender Singh.

மதிப்பீடு

1 தேவனை விசுவாசி

மைய முகாம்

கடிந்து கொள்ளப்பட்ட யோசேப்பின் கனவுகள்

(ஆதியாகமம் 37:2-11)

கனவு பெட்டி

கடிந்து கொள்ளப்பட்ட யோசேப்பின் கனவுகள்

2 தேவனை நம்பு

சமவெளி முகாம்

யோசேப்பு இரக்கமற்று நடத்தப்படுதல்

(ஆதியாகமம் 37:12-35)

மரச் சிலுவை

யோசேப்பு இரக்கமற்று நடத்தப்படுதல்

3 தேவனைச் சேவி

வன முகாம்

யோசேப்பு போத்திப்பார் வீட்டில் பணிபுரிதல்

(ஆதியாகமம் 37:36, 39:1-6)

கைமொழிமூலம் தேவனை சேவிப்பது

யோசேப்பு போத்திப்பார் வீட்டில் பணிபுரிதல்

4 தேவன்மீது உறுதி

பனிக்கட்டி முகாம்

யோசேப்பு சிறைச்சாலையில் மறக்கப்படுதல்

(ஆதியாகமம் 39:7 - 40:23)

காகிதப்படகு



யோசேப்பு சிறைச்சாலையில் மறக்கப்படுதல்

5 தேவனுக்கு நன்றி செலுத்து

சிகரம்

யோசேப்பின் கனவுகள் நிறைவேறுதல்

(ஆதியாகமம் 41:14-40, 41:53-57, 42:1-6).

சிகரத்தில் கொடிகள்

யோசேப்பின் கனவுகள் நிறைவேறுதல்

www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

யோசேப்பும் அவனது பலவர்ண அங்கியும்

யோசேப்பின் பலவர்ண அங்கி

பனிக்கட்டி கடத்தல்
நின்று நடனமாடுதல்

யோசேப்பும் கிணறும்

கிணறு

உருகும் பனிக்கட்டி
பனிக்கட்டி எறிதல்

புத்தக அடையாள குறி

பனித்துளி பிஸ்கோத்து

பனிக்கட்டி சுண்டிவிடுதல்
பனிப்புயலாட்டம்

பட விளிம்புச் சட்டம்

பனியுருண்டை பானம்

துப்புறவாளர் பனிக்கட்டியாட்டம்

பனிமலைப் படம்

மலை விருந்து

திருவிழா தினம்

www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

பாடங்களை எவ்வாறு பயன்படுத்துதல்?

சுலபமான விடுமுறை வேதாகமப் பள்ளி

'இலக்கு' என்ற வி.பி.எஸ்ற்கு உங்களை வரவேற்கிறோம். இது எளிமையான விடுமுறை வேதாகமப் பள்ளி. இது திட்டமிடவும் செயல்படவும் எளிமையானது. ஒரு நாளைத் தெரிந்து கொள்ளுங்கள். சில தன்னார்வத் தொண்டர்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் அழைப்பு அட்டைகளைத் தொங்கவிடுங்கள். அதன்பின் நீங்கள் முன் செல்ல ஆயத்தமாயிருங்கள்.
இவ்வாண்டு 'சிறுவர்கள் முக்கியமானவர்கள்' என்ற குழுவினர் பல நாடுகளிலுள்ள பள்ளிகளைப் பார்வையிட்டனர். அப்போது, சபைகள் விரும்பும்படி என்னென்ன மாற்றங்களைப் பாடத்திட்டத்தில் கொண்டு வரலாம் என்று அவர்களோடு ஆலோசித்தனர். சிறுவர்களிடம் அதிக நேரம் செலவிட இன்னும் அதிகமான செயல்கள் இருக்க வேண்டும் எனக் கூறினர். இக்காரணத்தால் இரண்டு பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. மிஷன் பகுதி, வேதாகமப் பகுதி - இதில் யோசேப்பு வருகிறார். இவை எளிதானது. மேலும் உற்சாகம் கொடுப்பதும் கற்பதற்கேற்றவைகளுமாம். வி.பி.எஸ். வகுப்பை இன்னும் சற்று தேவைக்கேற்ப நீட்ட உதவும்.
மற்றொரு வேண்டுகோள் யாதெனில் மாணவர் கையேட்டில் அதிக செய்முறைப் பயிற்சிகள் வேண்டும் என்பது. நாங்கள் வெவ்வேறான 5 செயல்முறைகள் 1/2 தாளில் செய்து முடிக்கச் செய்திருக்கிறோம். குறைந்த செலவு. அதிகப் பயிற்சி பெறலாம்.
நீங்கள் சுழற்சி முறையிலே, வகுப்பறை முறையிலே இவைகளை பயன்படுத்தினால் உங்கள் விடுமுறை வேதாகமப் பள்ளி இன்பகரமானதாயமையும். உங்களுடைய முழு சபையும் வாழ்வடையும்.

நாடகங்கள்

ஒவ்வொரு நாள் பாடத்தையும் அறிமுகம் செய்து பாடத்தின் மையப்பொருளை வாழ்வில் தொடர்புபடுத்த நாடகங்கள் உதவுகிறது. ஒரே நாடகப் பாத்திரங்களை ஈடுபடுத்துங்கள். அவர்கள் தங்கள் நாடக உடையிலேயே வாரம் முழுவதும் இருக்கட்டும். அவர்கள் ஒவ்வொரு வகுப்பிற்கும் சென்று மாணவர்களைச் சந்தித்து வாழ்த்து கூறட்டும். நாள் முழுவதும் மாணவருடன் அவ்வப்போது 'செல்பி'கள் எடுக்கட்டும்.
முயல் ஒன்று பனிச் சறுக்குச் செய்யக் கற்றுக் கொள்ளுகிறது. காட்டு மானே அதனுடைய பயிற்சியாளர். மலை உச்சிவரை ஏறி அங்கிருந்து பனிச்சறுக்கு செய்தல் அவர்களுடைய இலக்கு. ஆனால் முயல் இலகுவான சரிவுகளில் ஏறி, சறுக்க பழகி, பின்னர் நன்கு பனிச்சறுக்குச் செய்ய படிக்க வேண்டும். ஒவ்வொரு நாடகத்தின் போதும் சிறுவர் படிக்கும் பாடத்தை முயலும் படிக்க வேண்டும். முயல் சில நாடகங்களில் உருண்டு விழ வேண்டியதிருக்கும். எனவே முயலாக நடிப்பவர் விளையாட்டு வீரராக இருப்பது நன்று.

நாடகங்கள்
1. முயல் சரிவு - தேவனை விசுவாசி
2. குதித்தல் - தேவனை நம்பு
3. வலது இடது புறம் சறுக்கு - தேவனைச் சேவி
4. காத்திரு - தேவனில் நம்பிக்கை வை
5. சிகரம் - தேவனுக்கு நன்றி செலுத்து

சுழல்முறை விடுமுறை வேதாகமப் பள்ளி முறை

இப்பாடங்கள் ஒரே நாளில் மூன்று இடங்களில் நடைபெறுதாக எழுதப்பட்டது. உங்கள் மாணவரை 3 பிரிவுகளாக்கி, ஒவ்வொரு குழுவும் 3 வித செயல்களில் ஈடுபடுத்தப்படுகின்றன. ஒவ்வொரு இடத்திலும் 20-40 நிமிடங்கள் செலவிடுவர். ஒவ்வொரு இடத்திலும் பாடம் 3 முறை நடத்தப்பட்டு மூன்று பிரிவினரும் ஒவ்வொரு முறை பங்கு பெறுகிறார். சிறுவர்களின் வயதுக்கேற்ப 3 பிரிவுகளாக்கிக் கொள்ளுங்கள்.
சுலபமானது (4-6 வயதினர்) நடுத்தரமானது (7-9 வயதினர்) கடினமானது (10-12 வயதினர்)
உங்கள் சிறுவர்களில் 13 வயதிற்கு மேற்பட்டோர் வேனிற்கால விடுமுறைப் பள்ளியில் உதவியாளராயிருக்கலாம். கடினமான பாடம் படிக்கும் குழுவினருக்கானவை இவர்களுக்கும் ஏற்றது. ஒவ்வொரு வகுப்பிற்குப் பின்னர் பாடல் பாடப்படும்போது தங்கள் இடம் விட்டு மாறிக் கொள்ளலாம்.

www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

மரபு வழியில் வகுப்பறைமுறை

உங்கள் வகுப்பை சுழற்சி முறையில் நடத்தாவிட்டால் உங்கள் வேனிற்கால விடுமுறைப் பள்ளியை வகுப்பறை முறையில் நடத்தலாம். உங்கள் வகுப்பு நீண்ட நேரம் நடத்தப்பட இம்முறை பொருந்தும். இதற்குப் பயிற்றுவிப்போர் எண்ணிக்கை அதிகம் தேவைப்படும். ஏனெனில் ஒவ்வொரு பிரிவு வகுப்பினருக்கும் நடிகர் யோசேப்பு ஒருவர் மற்றும் ஆசிரியர் அதிக எண்ணிக்கையில் தேவை.

பணியாளர்

பணியாளர் எண்ணிக்கை அதிகமாயிருப்பின் வேனிற்கால விடுமறைப்பள்ளி மிகவும் விறுவிறுப்புடனமையும். ஒவ்வொருவரும் வேலையைப் பகிர்ந்து, வெவ்வேறு பணியில் ஈடுபடுவர். சுழல் முறைக்குக் கீழ்க்கண்ட பணியாளர் தேவை.

1 வேனிற் கால விடுமுறைப் பள்ளி இயக்குனர்
1 பாடற்குழு தலைவர் (அபிநயப் பாடலில் மற்றும் சிலர் பங்கெடுப்பர்)
1 முக்கிய பாடம் போதிப்பவர்
2 நாடகம் நடிப்போர் (முயல், காட்டுமான்)
ஒவ்வெரு பிரிவினருக்கும் இரண்டு தலைவர் வீதம் ஆறுபேர். (இவர்கள் தங்கள் வகுப்பினருடன் செல்வர்)
நிலையங்கள்
2 வேதாகம நிலையம் (1 ஒருங்கிணைப்பாளர், 1 யோசேப்பு நடிகர்)
1 வகுப்பு ஒருங்கிணைப்பாளர் (மாணவரின் செயல்முறை தாள்களுக்காக)
1 கைவினை ஒருங்கிணைப்பாளர்
1 சிற்றுண்டிச் சாலை ஒருங்கிணைப்பாளர்
1 விளையாட்டு ஒருங்கிணைப்பாளர்
1 மிஷன் ஒருங்கிணைப்பாளர்

செயல் திட்ட அட்டவணை

சுழல்முறை செயல்திட்டம் (3-5 மணி நேரம்)

தொடக்கம் (45 நிமிடம்)

- பாடல்
- நாடகம் (முயலும், மானும்)
- முக்கிய பாடம்



(20-40 நிமிடம் - ஒவ்வொன்றும்)

சிற்றுண்டிச் சாலை (தேநீர் 20-40 நிமிடம்)

மிஷனரி பயணம் (20-40 நிமிடங்கள்)

உறைபனி விளையாட்டு (20-40 நிமிடம்)

இறுதி நேரம் (15 நிமிடம்)

- பாடல்
- மறுநாளுக்கான அறிவிப்பு, முடிவு

மரபுமுறை வகுப்பு (6 மணி)

தொடக்க நேரம் (1 1/2 மணி)
30 நிமிடம் தியானம்: அனுதின பாடத்தைச் சார்ந்தது
30 நிமிடம் பாடல் - இந்த வேனிற்கால விடுமுறைப் பள்ளி பாடல் அல்லது ஆராதனை பாடல்
15 நிமிடம் முயல் மான் நாடகம்
15 நிமிடம் அன்றைய முதன்மைக் கருப்பொருள், மனன வசனம், வகுப்பறை செல்லுதல்.

வகுப்பறை நேரம் (1 1/2 மணி)
15 நிமிடம் ஆசிரியரும் யோசேப்பும் மாணவரிடம் உரையாடி பகிர்தல் (வேதாகம மலையின் பகுதி)
15 நிமிடம் யோசேப்புடன் சேர்ந்து வகுப்பறை செயல்பாடுகள் (வேதாகம மலையிலிருந்து)
45 நிமிடம் மாணவரின் பயிற்சி தாள்கள் (பனிச்சறுக்கு வகுப்பிலிருந்து)
15 நிமிடம் தேர்வு நேரம் (பனிச்சறுக்கு வகுப்பிலிருந்து)

சிற்றுண்டி வேளை / தேநீர் அருந்தும் நேரம் (30 நிமிடம்) (சிகரச் சிற்றுண்டி சாலையிலிருந்து)

வகுப்பு நேரம் (1 1/2 மணி)
20 நிமிடம் ஊழியம் பற்றிய பாடம் (ஊழிய சுற்றுலா பகுதியிலிருந்து)
30 நிமிடம் ஊழிய செயல்பாடுகள் (ஊழிய சுற்றுலா பகுதியிலிருந்து)
40 நிமிடம் கைவேலைகள் (கைவேலை பகுதியிலிருந்து)

விளையாட்டு நேரம் (30 நிமிடம்) (உறைபனி விளையாட்டுகளிலிருந்து)

பாட இறுதிவேளை (30 நிமிடம்)
15 நிமிடம் பாடல்கள்
15 நிமிடம் திருப்பிப் பார்த்தல், மறுநாளுக்கான அறிவிப்புகள்.

www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

சுழற்சி முறை நிலையங்கள்

வேதாகம மலை

நமது விடுமுறை வேதாகமப் பள்ளியினைச் சந்திக்க யோசேப்பு அழைக்கப்பட்டுள்ளார். எகிப்திலிருந்து வருகிற யோசேப்பைப் போல நமது வகுப்பிலுள்ள ஒருவர் ஆடை அணிந்து மாணவரை வாழ்த்தி தனது வாழ்வின் அனுபவங்களைக் கூறுகிறார். யோசேப்பு கூறி முடித்தபின் ஆசிரியர் யோசேப்புக்குத் தங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றார். பின்னர் அடுத்த பாட பகுதிக்கு ஆசிரியர் மாணவரை வழி நடத்துகிறார்.

நீங்கள் பிள்ளைகளுடன் பேசிய பின்னர், மாணவர் அந்நாளில் செய்ய வேண்டியதை தெரிந்தெடுக்கும்படி நடத்தப்படுவர். சுவற்றில் வாக்கு கொடுக்கும் போஸ்டர் தொங்கவிடப்படவும். தெரிந்தெடுப்புக்கான இரு காரியங்கள் அதில் உள்ளன. நேரடியாக மாணவர் தூண்டப்பட்டு தேர்வு செய்யாதபடி, மாணவராகவே யோசித்து தெரிவு செய்ய நடத்தப்படவும். தங்கள் தெரிந்தெடுப்பின் மீது கையொப்பமிடலாம்; அல்லது ஒட்டுத்தாளை ஒட்டலாம்.

மனன வசனம் கற்றல்

அந்த நாளின் பாடத்தையும் மனன வசனத்தையும் நினைவுபடுத்துதல். ஒவ்வொருவருக்கும் ஐந்து வித்தியாசமான செயல்களை விளக்கும் தாளினை மாணவருக்கு கொடுக்கவும்.

தாளின் முன்புறத்தில் இரண்டு விடுகதைகள் உள்ளன. பெரிய வகுப்பினருக்கு தனது இணை தோழருடன் விளையாடும் விளையாட்டு ஒன்று உள்ளது. மாணவர் தங்கள் தோழரைத் தெரிந்து கொள்ளலாம். அடுத்து, மறைந்துள்ள வார்த்தைகளைக் கண்டுபிடித்தல். சிறிய வகுப்பினருக்கு யோசேப்பின் படத்தில் பத்து வெவ்வேறு பொருட்கள் மறைத்து வரையப்பட்டுள்ள படம் கொடுக்கவும். அப்பொருட்களைக் கண்டுபிடித்து வர்ணம் தீட்டவேண்டும்.

மாணவனின் தாளை சுருட்டி பின்னர் நிமிர்த்தி அதை வர்ணம் தீட்டி தங்கள் மணிக்கட்டில் சுற்றிக் கொண்டு வீடு செல்லவும். இவ்வாறு மனன வசனம் வீட்டிற்குக் கொண்டு செல்லப்படும்.

கைவேலை நேரம்

தாங்கள் கற்ற பகுதியை ஞாபகப்படுத்தும் முறையில், கை வேலை செய்யப்படும். எல்லா கைவேலை மாதிரியையும் துண்டுப் பிரதியிலிருந்தும், இணையதளத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொருவருக்கும் ஒரு பிரதி எடுத்துக் கொடுக்கலாம். நீங்களாகவே சில கைவேலைகளைக் கற்றுத் தரலாம்.

சிற்றுண்டிச் சாலை

உங்கள் பகுதியிலுள்ள பொதுவாகக் கிடைக்கக்கூடிய தின்பண்டங்களை தேநீர் இடை வேளையிலோ, மதியஉணவு வேளையிலோ தரலாம். நாம் தரும் உணவுப் பதார்த்தங்கள் சிறந்ததாகவும், பாட சம்பந்தப்பட்டனவாகவும் இருப்பின் நலம். யோசேப்பின் பல வர்ண அங்கியை ஞாபகப்படுத்தும் ரொட்டி அல்லது பிஸ்கட் குறைந்த செலவும், மாணவரைக் கவர்ச்சிப்பதாகவும் இருக்கும். உங்கள் அருகில் கிடைக்கக்கூடிய உணவுப் பொருட்களை தருவது நலம்.

பனி விளையாட்டுகள்

குழந்தையின் வாழ்வில் விளையாட்டு இன்றியமையானவொன்று. எனவே விடுமுறை வேதாகம வகுப்பில் விளையாட்டுகள் உள்ளடங்கியிருப்பது அவசியம். ஒவ்வொரு பாட வேளையிலும் ஒன்றிரண்டு விளையாட்டுகளைச் சேர்க்கவும். உங்கள் வேதபாட வகுப்பு கவர்ச்சியாகவும் குளிர்ச்சியான அனுபவம் தரவும் பனிக்கட்டிகளை பயன்படுத்தவும்.

www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

ஊழிய சுற்றுலா

இலக்கு வேதாகம வகுப்பாக, பிற நாடுகளிலுள்ள சிறுவர் பற்றி அறிவதற்கென்று இப்பகுதி புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இப்பகுதிமூலம் ஊழியத்தில் பங்குபெற்ற பிற நாட்டு சிறுவர் பற்றி அறிய முடியும். இரு வெவ்வேறான நாடுகளின் ஊழியங்கள் பற்றி துண்டுப் பிரதிகள் தயாரித்துள்ளோம். ஒவ்வொன்றும் உலகின் ஒவ்வொரு பகுதியைப் பற்றியது. கலாச்சாரம், மொழி, தேவை, வேதாகம வகுப்புமுறை இவைகள், உலகின் மறுபகுதிகளில் எவ்வாறு உள்ளன என்பதை இப்பிரதிகள்மூலம் மாணவர் அறியலாம். அந்நாடுகள் பற்றி கற்பனை புரியலாம். லத்தீன் அமெரிக்க சிறுவர் இந்தியா பற்றியும், தெற்கு ஆசிய சிறுவர், தென் அமெரிக்கா பற்றியும் இதன்மூலம் அறிந்து கொள்ளலாம்.

இப்படங்கள், நாடுகள் அல்லது பகுதிகள் பற்றி வெவ்வேறு மொழிகளிலும் உள்ளன. இவ்வூழியங்களுக்காக அனுதினமும் காணிக்கை சேகரிக்கப்படலாம்.

சகோதரி கிறிஸ்டினா கிராஸ் அவர்களைத் தொடர்புகொண்டு உங்கள் நன்கொடையை இலக்கு வேனிற்கால விடுமுறை வகுப்பிற்கு அனுப்பவும். நாங்கள் மட்டுமே செலவினங்களைச் சந்திக்க இயலா அளவில் தேவைகள் உள்ளன. எனவே உங்கள் நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் ஊழியங்களைக் குறித்து எழுதவும், உங்கள் நன்கொடைகளை உங்கள் நாட்டிலுள்ள அலுவலகங்களுக்கு அனுப்பவும் செய்யலாம்.



சிறுவர் ஊழியங்களுக்கு
இலவசமான பாடங்கள்

சிறுவர்கள் முக்கியமானவர்கள்

ChildrenAreImportant.com

பதிப்புரிமை இல்லை.
ஆம்!

தேவையான பிரதிகளை அச்சிட்டு கொள்ளுங்கள். அதை நீங்கள் விற்கலாம்!
அவை எங்கள் இணையதளத்தில் எப்பொழுதும் இலவசமாக கிடைக்கும்.

Sunday School

Vacation Bible school

NEW resources
EVERY year

www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

கூடுதலான கருத்துக்கள்

ஒவ்வொரு மாணவனின் பெயரையும் தாளில் எழுதி வெட்டி ஒரு மரக்கிளையில் தொங்கவிடலாம்.

தாளில் பனித்துளிகள்

ஒரு தாளை பலமுறை மடிக்கவும். பக்கவாட்டிலிருந்து சில வடிவங்களில் வெட்டவும். பின்னர் தாளைப்பிரித்து தாளில் பனித்துளிகள் காணவும். இவ்வாறு படி வடிவில் தாள்களை வெட்டி அறையில் தொங்கவிடவும். மெல்லிய தாள் இலகுவாயிருக்கும். சாதாரண தாள்களும் பயன்படுத்தப்படலாம்.



பஞ்சில் பந்து உருண்டைகள் செய்து, நூலில் கோர்த்து ஓரிடத்தில் தொங்கவிடவும். இதை ஆலயத்தைச் சுற்றி தொங்கவிடலாம்.

தாளில் பனிக்கட்டி உருவை உண்டாக்கி மேற்கூரையிலிருந்து தொங்கவிடலாம்.

ஊதா அல்லது வெள்ளைநிற தாளில் பனித்துளிகள் தாளிலோ பிளாஸ்டிக்கிலோ செய்து அழகுபடுத்தலாம்.

பலூன்கள் மூலம் ஆலய வாசலில் வளைவு உண்டாக்கி கட்டி, அதன் வழியாக உட்பிரவேசிக்கலாம். பனிக்கால அனுபவம் கிடைக்கும்.

மலை உருவம்

மலை போன்ற உருவம் செய்து, இந்தப் பாடத்திட்டப்படி, ஒவ்வொரு நாளும் எந்த இடத்திலுள்ளோம் என குறிக்கவும். ஒவ்வொரு நாள் பாடத் தலைப்பையும் அதில் குறிக்கலாம்.

பனிசோப்பு

உண்மையான பனி அல்ல; ஆனால் வெள்ளை பனி நுரை தோற்றம் தருவன. சோப்பின் உறையைக் கிழித்துவிட்டு ஒரு கிண்ணியில் வைத்து, மின் அலை அடுப்பில் வைக்கவும். சோப்பு 2, 3 நிமிடம் சூடாகும்போது நுரையாக விரியும். இதை மாணவர் காணும்படி செய்து, குளிர்ந்ததும் வெளியே எடுத்துச் சென்று விளையாடக் கொடுக்கவும்.

www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

அலங்காரப் பொருள்

குளிர்காலத்தைக் குறிக்கும் அலங்காரப் பொருட்களில் படிகங்கள் ஒட்டலாம். எடுத்துக் காட்டு: பனி மனிதன்.

தேவையானவை
தண்ணீர்

1 குவளை தண்ணீருக்கு 3 தேக்கரண்டி போராக்ஸ் வீதம்

குறிப்பு

- தண்ணீரை கொதிக்கவிட்டு போராக்ஸ் தூள் போட்டுக் கலக்கவும். அடியில் தூள் படிந்தால் படியவிட்டு விடவும்.
- ஒரு சிறு அலங்காரப் பொருளை எழுதுகோலிலோ, கரண்டியிலோ, நீண்ட குச்சில் கட்டவும். குவளையின் ஓரமோ அடியோ அதில் படாதவண்ணம் கொதிநீர் கலவையில் மூழ்க விடவும்.
- இவ்வமைப்பு அசையாவண்ணம் ஒன்றிரண்டு மணிநேரம் ஓரிடத்தில் வைக்கப்படவும், படிகங்கள் உருவாகும். ஒரு இரவு அப்படியே விட்டுவிடப்பட்டால் நிறைய படிகங்கள் உருவாகும். அப்பொருளை துடைத்து, ஒருமணிநேரம் காய விடவும்.
- பூதக்கண்ணாடியால் படிகங்களைக் காணச் செய்யலாம்.

மாணவர் செல்பி எடுக்கட்டும்.

தாளை கூம்பு வடிவமாக்கி, மலைபோல் செய்யவும். பசை அல்லது நூலால் இணைத்து அடிப்பாகத்தைச் சமமாக வெட்டிவிடவும். உயர்ந்த மலையில் பனிபடர்வைக் காட்டவும்.

உங்கள் V.B.S. பள்ளியை அலங்கரிப்பது

- தாள் பனித்துளிகள்
- கோர்க்கப்பட்ட விளக்குகள்
- நீலநிற, வெண்ணிற பலூன்கள்
- வெள்ளை மேஜை விரிப்பு
- வெள்ளை, நீல நிறத்தில் வெட்டப்பட்ட நீண்ட தாள்கள்
- செய்யப்பட்ட மலைகள் - சுவரில் ஒட்டப்படல்
- நீல குவளையில் பனித்திவலைகள்

பனித்துளிகள் 3னு தாள் - LOS Ninos Cuentan in Mexico and Gauatemala விலோ அல்லது எங்கள் இணையத்தளத்திலோ பதிவிறக்கம் செய்யப்பட்டு பெறப்படலாம்.

பல கருத்துக்களை இணையத்தளத்தின்மூலம் பெற்று உங்கள் V.B.S. பள்ளி ஐ அதிக ஆர்வமூட்டுவதாக்கிக் கொள்ளுங்கள்.

www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

1 தேவனை விசுவாசி

மைய முகாம் / கடிந்து கொள்ளப்பட்ட யோசேப்பின் கனவுகள்

ஆதியாகமம் 37:2-11

நாள் 1: முயல் சரிவு

மிக எளிதான சரிவாகிய முயல் சரிவில் முயலும் காட்டு மானும் தங்கள் சறுக்குக் கட்டைகளுடன் மேலேறத் தொடங்குகின்றனர். அவ்வாரத்தில் அவர்கள் செய்ய வேண்டியன பற்றி இருவரும் வழியிலே உரையாடிக் கொண்டே போகின்றனர். அன்றைய தினமே அவர்கள் சிகரத்தைச் சேர்ந்து திரும்பி கீழே வந்துவிடலாம் என முயல் கூறுகின்றது. அவர்கள் முதல் சரிவினின்று கீழே வந்துவிட வேண்டியதிருக்கும் என்பதைக் காட்டுமான் விளங்க வைக்க வேண்டியதுள்ளது. முயல் குழப்பமடைகிறது. தாங்கள் உச்சிவரை செல்ல வேண்டியதிருக்கும்போது ஏன் கீழே செல்ல வேண்டும்? அவர்கள் மேலே ஏறிச் செல்ல வேண்டுமே! காட்டுமான் மேலேறுவது கீழிறங்குவது எனவும் சறுக்குவது எளிதாகும்வரை கற்றுக் கொள்ளவும் வேண்டும் என முயலுக்குக் கற்பிக்கிறது. சறுக்கு கட்டையை எவ்வாறு பொருத்திக் கொண்டு சறுக்க வேண்டும் என்பதும்கூட முயலுக்கு தெரியவில்லை. அது தனது தலைக்கவசத்தை ஒரு காலிலும், கட்டைகளில் ஒன்றைத் தன் தலையிலும் வைத்துக் கொண்டிருக்கிறது. பின்னர் முயல் பின்னோக்கி சறுக்கினது. அப்போது கட்டைகள் நகர, அவை முறிந்து விடுகிறது. எவ்வாறு சரியாகச் சறுக்க வேண்டும் என்பதைக் காட்டுமான் பொறுமையுடன் முயலுக்குக் கற்பிக்கிறது. சறுக்கு விளையாட்டு பார்ப்பதற்கு எளிதாகத் தோன்றினும் மிகக் கடினமானது என முயல் நினைத்து, உச்சி வரை செல்ல முடியாது என்று கவலை கொள்ளுகிறது. தான் சறுக்குக் கட்டையிலிருந்து விழுந்து விடுவலாமென எண்ணி பயமடைகிறது. ஒரு மரத்தை நோக்கி ஓடி, தனது கட்டுப்பாட்டை இழந்து, மலையின் அடிவாரம் வரை சறுக்கிக் கொண்டு வந்துவிட்டது. நல்ல பயிற்சி பெற்றபின் உச்சியை அடையலாம் என காட்டுமான் முயலை தைரியப்படுத்துகிறது. 'நான் சொல்லுவதை நம்பு. நீ ஒருநாள் உச்சிக்கு ஏறி வந்துவிடுவாய்' என்று உற்சாகமூட்டியது காட்டு மான். அது சொல்லுவதை நன்கு கவனித்து நம்பினது முயல். அவர்கள் சறுக்கிக் கொண்டே மேடையினின்று வெளியேறுகின்றனர்.

முக்கியப் பாடம்: தேவனை விசுவாசி

இவ்வாரத்தில் ஆவிக்குரிய மலையில் ஏறுகிறோம். எங்களுடன் நீங்களும் இம்மலை ஏற்றத்தில் பங்குகொள்ள
விரும்பினால் தேவன் உங்களுக்கென இலக்கு ஒன்றை வைத்துள்ளார் என அறிந்து கொள்ளுங்கள்.
நமது இன்ப உலா தொடங்கும் இடம் மலையின் அடியில் உள்ள பாசறையாகும். அங்கிருந்து மேலே வானத்தைப் பார்த்தால் நாம் போய் சேர வேண்டிய மலை உச்சி கடினமான தடைபோல காணப்படும். பயணத்தைத் தொடங்குமுன் மேலே போய்ச் சேருவது எவ்வளவு பயங்கரமானது என நினைக்கலாம்.
அசாத்தியமான காரியங்களைச் செயல்படுத்த மக்களை தேவன் தெரிந்தெடுத்துள்ளார். தமஸ்கு போகும் பாதையில் தேவன் பவுலிடம் பேசினதுபோல, இதுவரை அவரை அறியாமலிருந்தோரைக்கூட அழைக்கிறார். பவுல் அழைக்கப்பட்டபோது அவர் சபையை மிகவும் துன்புறுத்தியவர்.

வேதாகம வசனம்

"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்."
எபிரெயர் 11:6

இந்த V.B.S. பள்ளியில் நமது சிறப்பு விருந்தினராயிருப்போரைக் குறித்து மகிழ்ச்சியடைகிறோம். அவர் எகிப்தின் பெரிய அதிகாரியான யோசேப்பு. தமது 17ம் வயதில் தேவனால் பெற்ற பெரிய சொப்பனங்கள்பற்றி இன்றைய வகுப்பில் நம்முடன் பகிர்ந்து கொள்வார். தேவனுக்காக அரிய காரியங்களைச் செய்ய நாம் ஆற்றல் பெற்றுள்ளோம். பெரிதானவைகளைக் குறித்து கனவு காண நாம் ஆசைப்படுகிறோம். இந்நிலையில் நம்மிடமுள்ளதெல்லாம் ஆற்றல் மட்டுமே. தேவனுடைய ராஜ்யத்தில் நாம் யோசேப்பைப்போல பெரிய காரியம்



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

செய்தோராகவோ பிரச்சனையின்போது வீழ்ச்சியடைந்தோராகவோ காணப்படலாம். மறைவான பாவங்களான பெருமை, தன்னலம் போன்றவைகூட மலையேறும்போது தடைகளாக வந்திருக்கலாம். நமது கனவின் உச்சத்தைப் பெறுவதில் பல பாடுகளும், வேர்வையை உண்டாக்கும் கடின உழைப்பும் உண்டு. எனினும் யோசேப்பைப்போல தேவனை நம்பி நாம் தொடங்குவோம்.

தேவன் உங்களை அழைத்துள்ளார். உங்கள் பெயரைச் சொல்லி உங்களை அழைத்துள்ளார். உங்களைக் குறித்த பெரிய திட்டங்களையும் வைத்துள்ளார். அவரை நம்புவீர்களா? சூழ்நிலைக்கப்பாற்பட்ட சிறப்பானவைகளை அவருக்காக நீங்கள் செய்ய வேண்டுமென அவர் எதிர்பார்ப்பதை நீங்கள் நம்புகிறீர்களா? அப்படியானால் இந்த பயணத்தில் எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள். நாம் ஏறப்போகும் இம்மலையின் உச்சியே நமது இலக்காகும்.



முக்கிய கருத்து

தேவனை விசுவாசி

சுழற்சி முறை நிலையங்கள்

சிற்றுண்டிச் சிகரம்

நாள் 1

யோசேப்பின் அழகிய மேலங்கியில் செய்யக் கூடியவை இரண்டு.

தேவையான பொருட்கள்: •
ஒவ்வொருவருக்கும் ஒரு ரொட்டித் துண்டு
• முட்டை எண்ணெய் சேர்த்த பசை
• பழச்சாறு
• பாலாடைக் கட்டி
• சீவப்பட்ட இறைச்சி துண்டு
• தேவைப்பட்டால் தக்காளிச் சீவல், மிளகு, மிளகாய், வெள்ளரி.

செய்முறை:
மாணவர் வெட்டியோ, கடித்தோ ரொட்டித் துண்டினை மேலங்கி வடிவில் கொண்டு வரவேண்டும். முட்டை எண்ணெய் கலவையை மேலங்கியில் வர்ணமிட பயன்படுத்தலாம்.

வேறுவிதம்:

தேவையான பொருட்கள்:
• பிஸ்கோத்துகள்.
• பல வர்ண தானியங்கள்
• சர்க்கரை வெண்ணெய் பசை எந்த வர்ணத்திலாவது.

செய்முறை:
பிஸ்கட்டின் மேல் வெண்ணெய் சர்க்கரை பசை பூசவும். பிஸ்கட்டை உடைத்து மேலங்கியின் கைகளைச் செய்யலாம். மேலங்கியை அழகுபடுத்த வர்ணமுள்ள தானியங்களை வெண்ணெய் பூச்சின்மேல் கோடாகவோ, புள்ளியாகவோ தூவி வைக்கவும்.

www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

வேதாகம மலை

கடிந்து கொள்ளப்பட்ட யோசேப்பின் கனவுகள் (ஆதியாகமம் 37:2-11)

யோசேப்பு

வணக்கம்!
எனது பெயர் யோசேப்பு. உங்களுடன் இந்த V.B.S. வகுப்பில் நான் இருப்பது மகிழ்ச்சி. முதலில் நான் என்னைக் குறித்து சிறிது கூறிக் கொள்கிறேன். எனது வாழ்வில் தேவன் ஒரு பெரிய அழைப்பை வைத்திருந்தார். எனவே நான் ஒரு முக்கிய நபராகியுள்ளேன். இப்போது இஸ்ரவேல் என்று அழைக்கப்படும் கானானைச் சேர்ந்தவன் நான். எகிப்து என்ற வளமான தேசத்தில் பெரிய அதிகாரியானேன். பல தலைமுறையினரும் என்னைக் குறித்து கேள்விப்பட்டிருக்கின்றனர்.
எனது சாட்சியை உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நான் விரும்பிய வண்ணம் துரிதமாய் தேவன் எனக்குப் புகழ்ச்சியைத் தரவில்லை என்பது எனக்கு வியப்பளிக்கின்றது. நான் சிறுவனாயிருந்த நாட்களை நினைவு கூறுகிறேன்... நான் என் சகோதரருடன் முற்றத்தில் விளையாடினதை நினைவு கூறுகிறேன். பசும் புல்வெளியில் வெள்ளையும் சாம்பல் நிறமுமான ஓடியாடி மேயும் ஆடுகளைக் காத்துக் கொள்வேன். எனக்குப் 11 சகோதரர் உண்டு. அவர்களில் எவரும் என்னை அதிகம் நேசிக்கவில்லை. ஏனெனில் இஸ்ரவேல் என்னும் யாக்கோபு என்ற என் தகப்பன் என்னை அதிகமாய் நேசித்து பல வர்ணமுள்ள சிறப்பான அங்கியை எனக்குத் தந்திருந்தார். அது என் சகோதரர் உள்ளத்தை உறுத்திற்று. நான் அதை அணிவதில் அதிகப்பிரியம் வைத்திருந்தேன்.
எனக்குப் 17 வயதாயிருக்கையில் தேவன் எனக்குச் சிறப்பான கனவுகளைத் தரத் தொடங்கினார். என்மேல் தேவன் விசேஷ அழைப்பினை வைத்தார் என்பது எனக்குத் தெரியும். அவர் உங்களிலும் சிறப்பான அழைப்பினை வைத்துள்ளார் என்பதை உங்களில் எத்தனைபேர் அறிவீர்கள்? ஒருநாள் நான் வயல்வெளியில் எனது சகோதரருடன் வேலை செய்து கொண்டிருந்ததாகவும் எனது சகோதரரின் அரிக்கட்டுகள் என் அரிக்கட்டினைச் சுற்றி பணிந்து கிடந்ததாகவும் கனவு கண்டேன்.
சில தினங்களுக்குப்பின் சூரியனும் சந்திரனும் 11 நட்சத்திரங்களும் நட்சத்திரமான என்னை வணங்கியதாகவும் கனவைக் கண்டேன். இந்தக் கனவுகளினிமித்தம் என் சகோதரர் இன்னும் அதிகமாக என்னைப் பகைத்தனர்.
இச்சொப்பனங்களை என் தந்தையிடம் நான் கூறினபோது அவர் என்னைக் கடிந்து கொண்டார். என் தகப்பனிடம் மனம் வேறுபடுவது எனக்குப் பிடிக்கவில்லை.
நான் முக்கியமானவன் என்னும் காரியத்தைக் காட்டும் சொப்பனங்களை நான் கண்டிருந்த போதிலும் மேய்ப்பன் என்னும் தொழிலையே செய்து கொண்டு வந்தேன். நான் யார் என்பதை எவரும் அறிந்திருக்கவில்லை. நான் மலையில் ஏறாமல் கீழ்நோக்கிச் சென்று கொண்டிருந்ததை உணர்ந்தேன். தொடக்கத்தில் தேவன் எனக்குத் தரிசனங்களைத் தந்து நான் சிறப்பானவர் எனக் கூறினார். ஆயினும் எனது சூழ்நிலையில் மாற்றமில்லை. நான் ஒரு ஆடுமேய்க்கும் சிறுவனாகவே இருந்தேன். என்னைப்பற்றி எதுவும் யாருக்கும் தெரியவில்லை.

ஆசிரியர்

எங்கள் V.B.S. வகுப்பிற்கு நீர் வந்ததால் மிக்க நன்றி, யோசேப்பு! யோசேப்பே! நீர் தேவனிடத்திலிருந்து விசேஷ அழைப்பினைப் பெற்றபோதிலும் உமது சூழ்நிலை மாறாமலிருந்தது. அது வேதனையைத் தந்திருக்கலாம். எனினும் தேவன் அவ்விதமாகவே செயல்படுகின்றார். நாம் தேவனுக்கென பெரிய காரியங்களைச் செய்யும்படி பயன்படவிருப்பின், நமது சூழ்நிலையையல்ல தேவனையே நம்ப வேண்டும். நாம் எங்குமே செல்லாததுபோலிருப்பினும், அல்லது பின்னோக்கிச் செல்வதுபோல் தோன்றினாலும் தேவனையும் அவர் அழைத்த அழைப்பையும் நம்ப வேண்டும்.

யோசேப்பே! உமது தந்தை உங்கள் தரிசனம் குறித்து உங்களைக் கடிந்து கொண்டபோதிலும் நீர் தேவனை நம்பினீர். சிறுவர்களே! நடக்கும் காரியங்களினின்றும், நமது மேலிருந்தும் நமது கண்களை விலக்குவோம். நமது பார்வையை தேவன்மீது வைப்போம். யோசேப்பைப்போல உங்கள் சூழ்நிலையைக் காட்டிலும் தேவன்மேல் நம்பிக்கை வைப்பீர்களா?

www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

செயல்முறை

பிள்ளைகளை படுக்க வையுங்கள். அவர்கள் வானத்து நட்சத்திரங்களைப் பார்க்கட்டும். ஒளிரும் நட்சத்திரங்களை அறையின் கூரையில் ஒட்டி விளக்குகளை அணைக்கவும். (உங்கள் வகுப்பு நேரம் மாலையாயிருப்பின் உண்மை நட்சத்திரங்களைக் காணச் செய்யுங்கள்) படுத்திருந்து, தேவன் அவர்கள் வாழ்வில் செய்யவுள்ள பெரிய காரியங்களைக் கனவு காணத் தூண்டுங்கள். தரிசனப் பெட்டியில் தங்கள் கனவுகளை எழுதிப் போடச் செய்யவும்.

கூடுதலான ஆலோசனை

இன்றைய நாளின் ஆசிரிய தியான வேளையில் ஆசிரியர்களும் இரகசிய தரிசன பெட்டியில் தங்கள் தரிசனங்களை எழுதிப் போடட்டும்.

விருப்பத் தேர்வு

விருப்பத் தேர்வு அட்டையின்முன் மாணவரைக் கூட்டுக. ஒவ்வொரு கேள்வியையும் பதிலாக அளிக்கப்பட்ட 2 தீர்வுகளையும் அறிமுகம் செய்க. தங்கள் அபிப்பிராயத்தை அட்டையில் குறிக்கும்படி செய்க. வசதிப்பட்டால் ஒட்டுத் தாளை அதன்மீது ஒட்டச் செய்யலாம். சரியான உத்தரவை நீங்கள் காண்பிக்க முயற்சிக்க வேண்டாம்.

அ) யோசேப்பு தனது கனவுகளை குடும்பத்தாரிடம் சொன்னது சரியான காரியம். ஏனெனில் அவைகள் நிறைவேறினபோது தேவனுக்கு மகிமை செலுத்துவர்.
ஆ) தனது குடும்பத்தாரின் உணர்வுகள் பாதிக்கப்படுமாதலால் யோசேப்பு தனது வாயை மூடிக் கொண்டிருந்திருக்க வேண்டும்.

உறைபனி விளையாட்டு

1. பனிக்கட்டி கடத்தல்
மாணவர் இருகரங்களையும் விரித்து வட்டமிட்டு உட்காரவும். இசை மீட்டத் தொடங்கும்போது, பனிக் கட்டியைக் கடத்த வேண்டும். இசை திடீரென நிறுத்தப்படும்போது, பனிக்கட்ட யார் கையிலிருக்கிறதோ, அவர் போட்டி விட்டு விலகுவார். பனிக்கட்டி உருகும்வரை, அல்லது வட்டத்தில் ஒரே ஒருவர் மிஞ்சும் வரை போட்டி தொடரும். இசை நிறுத்தப்படும்போது கையில் பனிக்கட்டி இராதவாறு விரைவில் கடத்த வேண்டுமென்பதே ஆட்டத்தின் மையப் பொருள்.

2. உறைதலும் நடனமும்
வேகமான தாளமுள்ள இசையை மீட்டவும். இசை நிறுத்தப்படும் வரை எல்லாரும் நடனமாட வேண்டும். இசை நின்றதும் 'உறை' என்று கூறுவர். மீண்டும் இசை தொடங்கும் வரை அனைவரும் அசையாமல் நின்று கொண்டிருக்க வேண்டும்.

www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

கைவினைப் பாடம் நாள் 1

யோசேப்பும் அவனது பலவர்ண அங்கியும்

செய்முறை

1. செய்யப்பட வேண்டிய பொருளின் உருவை வெட்டி எடுத்துக் கொள்ளவும் - தலை, அங்கி, கைகள், கால்கள்.
2. மெல்லிழைத் தாளில் நீண்ட துண்டுகளை வெட்டி எடுக்கவும். யோசேப்பின் மேலங்கி நீளத்தில் ஒவ்வொரு துண்டும் இருக்கட்டும்.
3. ஒவ்வொருவருக்கும் 1 தலை, 1 மேலங்கி ஓரம், 1 மேலங்கி, 2 கைகள், 2 கால்கள், 6,7 மெல்லிழைத் தாள்கள், 1 சுருண்ட ரிப்பன் தரவும்.
4. மேலங்கியின் கீழ் ஓரத்தில் மெல்லிழைத்தாள் துண்டினை ஒட்டவும்.
5. மேலங்கியின் அமைப்பு பார்வையில் தெளிவாகத் தெரிவதற்காக ஓரத்தில் மெல்லிழைத் தாள் துண்டுகளை ஒட்டவும்.
6. தலையை வர்ணமிட்டு அதனிடத்தில் ஒட்டவும்.
7. கைகள், கால்களை அதனதனிடங்களில் ஒட்டவும்.
8. இந்தக் கைவேலை நன்கு உலர்ந்ததும் பின்புறம் காந்தத் தகட்டினை ஒட்டி பொருத்தவும்.

பனிச்சறுக்கு வகுப்பு

மாணவர் பயிற்சிப் பக்கங்கள்

மாணவர் பயிற்சிப் பக்கங்களை அவர்களுக்கு கொடுங்கள். புதிர்களைச் செய்க. துண்டுத்தாளை மடித்து மனை வசனம் தெரியும்படி மணிக்கட்டில் கட்டிக் கொள்ளவும். ஒவ்வொரு மாணவனின் மணிக்கட்டியிலும் காண்பிக்கப்பட்டுள்ளபடி கட்டப்படவும். அவாகள் அதை அணிந்து கொண்டு வீடு செல்வர்.

விடைகள்





எனது வாழ்வில் தேவன் அசைவாடுவதைக் காண முடியுமா? (போர்கப்பல் விளையாட்டு 5இல் 1, 4ல்1, 3இல் 2, 2இல் 2, 1இல் 1). போர்க்கப்பல் விளையாட்டைப் போன்றே ஒவ்வொரு முறையும் 'தேவன் எனது வாழ்வில் அசைவாடுவதைக் காண முடியுமா?' என்று கேட்கவும். ஒவ்வொரு விளையாட்டிலும் இருவர் பங்கு பெறுவர். தங்கள் மாணவர் கையேட்டில் இரு கட்டங்களைப் பயன்படுத்தவும். ஒரு கட்டத்தில் தனது கப்பல்மீது எதிரியிடமிருந்து வந்த தாக்குதலைக் குறிக்கவும். மறு கட்டத்தில் தான் செய்த தாக்குதலைக் குறிக்கவும். எழுதுகோலால் 5 சதுர நீள கப்பல் ஒன்று, 4 சதுர அளவில் ஒன்று, மூன்று சதுர அளவில் 2,2 சதுர அளவில் 2,1 சதுர அளவில் 1 என்று வரையவும். அதன் பின்னர் விளையாடத் தொடங்கலாம். எதிரியின் ஒவ்வொரு கப்பலிலும் தேவனுடைய அசைவைக் காண்பவர் வென்றவராவார்.



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

2 தேவனை நம்பு

சமவெளி முகாம் / யோசேப்பு இரக்கமற்று நடத்தப்படுதல்

ஆதியாகமம் 37:12-35

நாள் 2: குதித்தல்

இன்று முயல் எவ்வாறு குதிக்க வேண்டும் என கற்றுக் கொள்ளுகிறது. மானும் முயலும் சற்று கடினமான சரிவில் தொடங்குகின்றனர். நேற்று சறுக்கல் எவ்வளவு பயமூட்டுவதாயிருந்தது என முயல் மானிடம் கூறியது. அது திரும்புதல், விரைவாகச் செல்லுதல், கட்டை மீது நிற்பது ஆகியவற்றைக் கற்றுக் கொள்ளுகிறது. தான் சறுக்குவதில் மிக திறன் பெற்றுள்ளதாகவும், இனி மானிடமிருந்து உதவி பெறத் தேவையில்லை என்பதாகவும், தானே உச்சிவரை சென்று விடலாம் எனவும் முயல் நினைக்கிறது. சரிவின் மேல் ஏறியதும், குதிக்க வேண்டிய நேரத்தில் எவ்வாறு குதிக்க வேண்டும் என மான் முயலுக்குக் கற்பிக்கிறது. முதலில் அது முன்னால் சாய்ந்து, தனது முட்டியை மடக்க வேண்டும். பின்னர் குதித்து எழும்பும்போது தனது காலை நீட்டி கைகளை விரித்து வைக்க வேண்டும் என்று கூறியது. மான் கற்றுத் தரும்போது முயல் அதற்கு மாறாகச் செய்கிறது. தனது கைகளை உயர்த்தி, தரையில் விழுந்து, தனது கட்டைகளில் ஒன்றினால் மானைக் குத்தித் தள்ளியது. இறுதியில் மான் சொன்னபடியே முயல் செய்கிறது. ஆனால் மான் கவனியாத போது முயல் தான் கற்றதற்கு மாறாகச் செய்கிறது. கடைசியில் குதிக்கும்போது முயல் உடலை நேராக வைத்து குதித்து, பின்னாக இடறி பனிமீது விழுகிறது. முயல் எழும்பி மறுபடியும் முயன்று இடறினது. மான் பொறுமையுடன் என்ன செய்ய வேண்டுமென கற்றுத் தந்து. முயல் "நீ சொன்னது சரிதான். நீ செய்து காண்பிப்பதை நீ கண்டு அறிந்துள்ளாய். நீ சொன்னதை நான் கவனித்து உன்னை நம்பியிருக்க வேண்டும்" என்று கூறினது. அடுத்த முறை முயல் சரியாக முயன்று மிகச் சரியாகத் தரையில் வந்து இறங்கினது. 'இது அற்புதமாக இருக்கிறது. இது நடக்காது என நான் நினைத்தேன். ஆனால் நடந்துவிட்டது. அப்பா! நான் உச்சி செல்லுமுன் கற்றுக் கொள்ள வேண்டியது அதிகம் உள்ளது' என்று முயல் சொன்னது. மான் அமைதியாகச் சிரித்துக் கொண்டு, 'என்னை நம்பி நான் சொன்னபடி செய். ஒருநாள் நீ மலை உச்சியை அடையலாம்' என்று கூறியது. அவர்கள் சறுக்கிக் கொண்டே மேடையை விட்டகலுகின்றனர்.

முக்கியப் பாடம்: தேவனை நம்பு

இவ்வார மலையேற்றத்தில் அடிவார பாசறையிலிருந்து கிளம்பி, உறைந்த நீரோடை பாசறைக்கு வந்துள்ளோம். நமது ஆவிக்குரிய பயணத்தில் நமது முதல் நிறுத்தம் தேவனை நம்புவதைப் பற்றியது. நம்மை நாம் நம்புவதே நமது இயல்பு. நமது சாதனைகளை நமது முயற்சியால் அடைய முனைகிறோம். எனினும் அது தேவ திட்டமல்ல. மேலேறுவதைப்பற்றி தேவனுடைய திட்டம் கீழ் இறங்குவதே. இன்று யோசேப்பின் கதையில் அதிகம் கேட்கப் போகிறோம். அவனுக்குப் பெரிய கனவுகள் இருந்தன. ஆனால் அவனுக்கு முதலில் நேரிட்ட செயல் அவனை முற்றிலும் பின் தள்ளியது. நல்ல செல்வாக்கு பெற்று, தனது சகோதரர் தன்னை வணங்கும் நிலை அடையுமுன் அவன் அடிமையாக விற்கப்பட்டான்.

வேதாகம வசனம்

"உன் சுயபுத்தியின்மேல் சாயாமல்,
உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில்
நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம்
அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர்
உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்."
நீதிமொழிகள் 3:5-6

நமது வாழ்வைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்ததும் வாழ்க்கை இலகுவாக இருக்கும் என நாம் கற்பனை செய்கிறோம். சிறந்த ஒரு கனவை நாம் கண்டு அல்லது தேவனிடமிருந்து ஓர் அழைப்பை பெற்றதும் காரியங்கள் நேர்த்தியாக இருக்கும் என எண்ணுகிறோம். பெரிய மேடை மேலிருப்பது போலவும், பணித்தளமொன்றில் இருப்பது போலவும், பதவி உயர்வு பெற்றது போலவும், அநேக நண்பர்களைப் பெற்றது போலவும் நாம் கற்பனை செய்து விடுகிறோம். எனினும் இவை ஒன்றும் நடைபெறா நிலையில் திகைக்கிறோம். நீங்கள் கற்பனை செய்வதைவிட தேவன் உங்களைக் குறித்து கரிசனையுள்ளவராயிருக்கிறார். நீங்கள் பயணிக்கையில் உங்கள் தேவை இன்னது என்பதையும், வழியில் உங்களைப் போதித்து நடக்கவும் திட்டம் வைத்துள்ளார். நீங்கள் பக்குவமடையுமுன்



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

உயர்ந்த இடத்தில் உங்களை வைப்பதில்லை. நீங்கள் அந்த இடத்தில் போய்ச் சேரும்போது அவ்விடத்திற்குத் தகுதியுடையோராய் இருக்கும்படி உங்களுக்குப் பயிற்சி அளித்து உங்கள் காரியங்களை மேற்போட்டுக் கொள்கிறார்.

இந்த வாரத்தின் முக்கிய வசனம்: தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்து போவான். என் நிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை காப்பான். மத்தேயு 10:39.
தேவனை உங்கள் எஜமானாக ஏற்று உங்கள் காரியங்கள் அனைத்தையும் அவர் ஆளுகைக்கு உட்படுத்துவது ஒருவேளை பயத்தை உண்டாக்கும். ஆனால் உங்கள் வாழ்க்கையை அவரிடம் ஒப்புக்கொடுக்கும்போது அவர் சிறப்பானதைச் செய்கிறார். யோசேப்புக்கு ஏற்பட்டது போல நீங்களும் பின் தள்ளப்படுவதுபோல உணரலாம். அவரை நம்பினால் பெரிய கனவுகளை வாழ்க்கையில் நிஜமாக்க தேவனால் கூடும்.

இரட்சிப்புக்கான ஜெபம்:
அன்புள்ள தேவனே! இன்று எனது வாழ்க்கையை உம்மிடம் தருகிறேன். நான் அல்ல; உமது கரத்திலே என் வாழ்க்கையை ஒப்புக் கொடுக்கிறேன். நான் பின்நோக்கிச் செல்வது போலிருப்பினும் இன்று என் வாழ்வில் உம்மை நம்புவதையே தெரிந்து கொள்ளுகிறேன். மலை உச்சிக்குச் செல்லும் வழி கீழ்நோக்கியுள்ளது என்பதை இன்று அறிந்து கொள்கிறேன். எனது வாழ்வை நீர் பொறுப்பேற்பதால் நன்றி. உம்மை நம்புகிறேன்.

சுழற்சி முறை நிலையங்கள்

சிற்றுண்டிச் சிகரம் நாள் 2

இன்று கிணறு ஒன்று செய்து யோசேப்பை அதனுள் போடலாம்.



தேவையான பொருட்கள்
- ஒரு தர்பூசணியை இரண்டாக வெட்டவும்.
- ஒவ்வொரு மாணவனுக்கு வட்ட வடிவத்தில் உள்ள ஒரு பிஸ்கட்.
- தர்பூசணியில் உள்ள விதைகளை ஒட்ட சிறிது பிசின்.

செய்முறை:
- தர்பூசணியில் உள்ள பழத்தை மெதுவாக எடுத்துவிட வேண்டும்.
- விதைகளைக் கொண்டு கண் மூக்கு செய்து பிஸ்கட்டில் ஒட்டவும்.

www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

வேதாகம மலை

யோசேப்பு இரக்கமற்று நடத்தப்படுதல்
(ஆதியாகமம் 37:12-35)

யோசேப்பு

வணக்கம்! எனது பெயர் யோசேப்பு. நான் உங்கள் V.B.S. வகுப்பிற்கு வந்திருப்பது மகிழ்ச்சி தரும் காரியம். நான் முக்கியமான நபரானேன் என்று உங்களிடம் கூறியுள்ளேன். நான் எகிப்தின் பிரதானியாக அதாவது பிரதான மந்திரியாக உயர்த்தப்பட்டேன். அங்கே நான் சாப்நாத் பன்னேயா என்று அழைக்கப்பட்டேன். ஆனால் நீங்கள் என்னை யோசேப்பு என்றே கூறலாம் (ஆதியாகமம் 41:45).
நான் 17 வயதாயிருக்கையில் தேவன் பெரிய காரியங்களை எனக்கு வாக்குப் பண்ணினார். அப்போது முழு உலகமும் என்னை விட்டு அகன்று போனது. நான் எதிர்பார்த்தபடி தேவன் முன்னேற்றத்தை எனக்குத் தரவில்லை.
நான் சிறுவனாயிருந்த காலத்தை நினைவுகூருகிறேன்....
தேவன் தந்த சொப்பனங்களை தெளிவாக நினைவுபடுத்துகிறேன். அவை அப்படியே நிறைவேறுவதுபோல் தெளிவாயிருந்தன. எனினும் எனது குடும்பத்தாரிடம் அவற்றைக் கூறினபோது எனது சகோதரர் அதிகமாக என்னை வெறுத்தனர். என்னை அகற்ற விரும்பினர்.
ஒருநாள் என் சகோதரரை சந்திக்க நான் சென்றபோது, அவர்கள் என்னைப் பிடித்து, தண்ணீரற்ற ஒரு குழியில் என்னைத் தள்ளினார்கள். திட்டமாகத் தெரியவில்லை; ஆனால் நான் நினைக்கிறேன், அவர்கள் என்னைக் கொன்றுவிட நினைத்தனர். அப்போது எகிப்திற்குப் போக ஒட்டகங்கள்மேல் வந்த ஒரு கூட்டமான வியாபாரிகளைக் கண்டார்கள். உடனே கிணற்றிலிருந்த என்னை வெளியே இழுத்து, ஒரு அடிமையாக அவர்களிடம் விற்றார்கள். தங்கள் சொந்த சகோதரனுக்கு இவ்வாறு அவர்கள் செய்ததை என்னால் நம்ப முடியவில்லை.

எங்கள் தகப்பனிடம் நான் மரித்துப் போனேன் என்று கூறி பலவர்ணமான எனது அங்கியில் இரத்தத்தைத் தோய்த்து, அவரிடம் கொடுத்தனர். எனவே அவர் என்னைத் தேடும் முயற்சியில் ஈடுபடவில்லை. அவர் என்னைத் தேடியிருக்கலாம்.
நான் அடிமையாக, தனியனாக விடப்பட்டேன். எனது குடும்பமோ, என்னை நேசிப்போரோ எவருமில்லை. எனக்கு அவர்கள் மொழி புரியவில்லை. அவர்களிடமிருந்து தப்பிச் செல்லவும் வழியில்லை.
தொடக்கத்தில் தேவன் சொப்பனத்தை எனக்குத் தந்து, ஒருநாள் நான் மேன்மையாக இருப்பேன் என்று கூறினார். எனினும் இப்போதுள்ள சூழ்நிலை மிக கேடாயிருந்தது. இப்போது நான் அந்நிய தேசத்தில் ஒரு அடிமை. இனி எப்படி இருப்பேன் என்று கூறுவதற்கு எதுவுமில்லை.

ஆசிரியர்

மீண்டும் எங்கள் வகுப்பிற்கு வந்ததற்கு நன்றி!
தேவனிடமிருந்து மேன்மையான அழைப்பு விடுக்கப்பட்டதும் உமது சூழ்நிலைகள் மோசமானதும் விநோதமாயிருந்திருக்கும். எனினும் தேவன் இவ்விதமாகவே செயல்படுகிறார். நம்மை தேவன் பெரிய காரியங்களுக்காக அழைத்தால், காரியங்கள் கடினமாகும்போது அவரை நம்ப வேண்டும். நம்மைப் பயிற்றுவிக்கவே பாடுகளையும், வேதனைகளையும் தேவன் அனுமதிக்கின்றார். நாம் பின்னோக்கிச் செல்லுவதுபோல் தோன்றுகையில் தேவனையும், நமக்குமுன் அவர் வைத்த அழைப்பையும் நம்ப வேண்டும். கடின சூழ்நிலையில் நமது வாழ்க்கையைக்குறித்து நமது கண்களை நம்மீது வைக்கக் கூடாது. நமது கண்களை அவர்மீது பதித்துக் கொள்ள வேண்டும். சிறுவர்களே! உங்கள் வாழ்வில் தேவனை நம்புவீர்களா?



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

செயல்முறை

ஒரு மரச்சிலுவையை தயாரித்து வகுப்பறையின்முன் வையுங்கள். ஒவ்வொரு பிள்ளையிடமும் ஒட்டும் தாள் ஒன்றைக் கொடுங்கள். தேவனை நம்பு என்று ஒவ்வொருவரிடமும் கூறி ஒரு தாள் கொடுங்கள். தங்கள் வாழ்வில் தேவனை நம்புவதாக எழுதச் சொல்லுங்கள். அவரை நம்புவதே முதல் முக்கிய காரியம். மாணவன் முதன்முறையோ, மீண்டுமாகவோ தன்னை அர்ப்பணித்தால் தாளில் 'எனது வாழ்க்கை' என்று எழுதி அதைச் சிலுவையில் ஒட்டச் செய்யுங்கள். ஏற்கெனவே கிறிஸ்தவனாயிருப்போர் இன்று எதை அர்ப்பணிக்க வேண்டுமென விரும்புகிறோம் என்பதைக் குறிக்கச் சொல்லுங்கள். அதற்காக ஜெபிக்க உற்சாகப்படுத்துங்கள்.

கூடுதலான ஆலோசனை

இன்று V.B.S. வகுப்பு தொடங்குமுன் ஆசிரியர் தியானப் பகுதி நேரத்தில், அவர்களும் தங்கள் அர்ப்பணிப்பை எழுதி சிலுவையில் ஒட்டட்டும்.

விருப்பத் தேர்வு

விருப்பத் தேர்வு அட்டையின்முன் மாணவரைக் கூட்டுக. ஒவ்வொரு கேள்வியையும் பதிலாக அளிக்கப்பட்ட 2 தீர்வுகளையும் அறிமுகம் செய்க. தங்கள் அபிப்பிராயத்தை அட்டையில் குறிக்கும்படி செய்க. வசதிப்பட்டால் ஒட்டுத் தாளை அதன்மீது ஒட்டச் செய்யலாம். சரியான உத்தரவை நீங்கள் காண்பிக்க முயற்சிக்க வேண்டாம்.

அ) கிணற்றுக்குள் தள்ளப்பட்டது என்பது விளையாட்டல்ல. ஆனால் தனது ஆடுகளை அங்குமிங்கும் மேயவிட்டுக் கொண்டிருந்ததை விட்டுவிட்டு, அந்நிய நாட்டிற்கு பயணிப்பது அதிக மகிழ்ச்சியை அளித்திருக்குமாதலால் யோசேப்பு தனது சகோதரர் பேரில் கோபம் அடைந்திருக்க மாட்டார்.

ஆ) யோசேப்பு வீர விளையாட்டுகளைக் கற்றிருப்பார். எனவே தனது வீரத்தை சகோதரருக்குக் காண்பித்து, கிணற்றில் கிடந்ததை பெரிதுபடுத்தியிருக்கமாட்டார்.

இ) கிணற்றைவிட்டு வெளியேற உதவிக்காக அனுப்பப்பட்ட கயிற்றைப் பார்த்ததும், வெளியே நின்று கொண்டிருந்த சகோதரரைக் கண்டு, மேலும் தனக்கு ஆபத்து நேரிடலாம் என பயந்து வெளியே வர மறுத்திருப்பார். தான் செத்துப்போய் விட்டதாகக்கூட மாய்மாலம் செய்திருப்பார்.

உறைபனி விளையாட்டு

1. பனிக்கட்டி உருகுதல்

குழுக்களாகப் பிரிக்கவும். குழு வரிசையில் நிற்க வேண்டும். குழு தலைவனிடம் ஒரு பனிக்கட்டித் துண்டு தரப்படும். முறை முறையாக பனிக்கட்டியைக் கடத்தி, கரத்தில் வைத்து உருக வைக்கவும். தங்கள் கைகள் மரத்துப் போகும் வரை உரசிவிட்டு அதை அடுத்தவருக்குக் கடத்தவும். முதலில் உருக வைக்கும் குழு வென்றதாகும்.

2. பனிப்பந்து எறிதல்

வெள்ளைத்தாள் அல்லது செய்தித்தாளைக் கசக்கி பந்து உருண்டையாக்கவும். ஒரு கோட்டின் இரு பக்கமும் இரு குழுவினர் நிற்பர். அவர்களிடம் பனி உருண்டை (தாள் உருண்டை) உள்ளது. போட்டி தொடங்கும்போது தங்களிடமுள்ள உருண்டைகளை எதிர் பக்கத்திடம் எறிய வேண்டும். கீழே அவை விழ, விழ பொறுக்கி எதிர்புறம் எறிய வேண்டும். 1 நிமிட நேரத்தில் போட்டி நிறுத்தப்படும். எந்த குழுவின் முன் குறைந்த உருண்டை உள்ளதோ அந்தக் குழு வென்ற குழுவாகும்.

www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

கைவினைப் பாடம் நாள் 2

கிணறு

செய்முறை
1. கிணற்றின் படத்தினை கோடுகளில் வெட்டி, புள்ளிகளில் மடித்து உருவாக்கவும்.
2. கிணற்றிற்கு வர்ணம் தீட்டுக.
3. கிணற்றின் அடிப்புறத்தில் வசனம் ஒட்டுக.
4. துண்டுத் தாள்களைப் புள்ளியிட்ட இடங்களில் ஒட்டி செங்கல் தோற்றம் வருவிக்கவும்.
5. யோசேப்பு படத்தை வெட்டி எடுத்து கிணற்றுக்குள் போடவும்.

பனிச்சறுக்கு வகுப்பு

மாணவர் பயிற்சிப் பக்கங்கள்

மாணவர் பயிற்சிப் பக்கங்களை அவர்களுக்கு கொடுங்கள். புதிர்களைச் செய்க. துண்டுத்தாளை மடித்து மனை வசனம் தெரியும்படி மணிக்கட்டில் கட்டிக் கொள்ளவும். ஒவ்வொரு மாணவனின் மணிக்கட்டியிலும் காண்பிக்கப்பட்டுள்ளபடி கட்டப்படவும். அவர்கள் அதை அணிந்து கொண்டு வீடு செல்வர்.

விடைகள்







யோசேப்பு கிணற்றுக்குள் வீழ்தல் (வார்த்தை விளையாட்டு)
ஒருவர் ஒரு வார்த்தையை மனதில் நினைத்து அவ்வார்த்தையின் எழுத்துக்களின் எண்ணிக்கைப்படி கோடு வரையவும். மற்றவர்கள் அவ்வார்த்தையை யூகிக்கவும். சரியாக அமைந்தால் கோட்டில் எழுதவும். எழுத்து தவறாக இருப்பின் அந்த இடத்தில் உடலுறுப்பு ஒன்றின் படம் அதில் வரையவும். (உடல் உறுப்புகளில் தலை, கைகால் நீங்கலான உடற்பகுதி, 2 கால்கள், 2 கைகள், 2 கரங்கள், 2 பாதங்கள்) யோசேப்பு கிணற்றுக்குள் விழுமுன் அவ்வார்த்தையைச் சரியாக யூகித்து விடவேண்டும்.

A B C D E F
G H I J K L
M N O P Q
R S T U V
W X Y Z

www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

3 தேவனைச் சேவி

வன முகாம் / யோசேப்பு போத்திப்பார்

வீட்டில் பணிபுரிதல்

ஆதியாகமம் 37:36, 39:1-6

நாள் 3: வலது இடதுபுறம் சறுக்குதல்

இன்று, தனது வேகத்தைக் கட்டுப்படுத்தி வலது இடது புறம் எவ்வாறு சறுக்க வேண்டும் என முயல் கற்றுக் கொள்ளுகிறது. இப்போது அதிகக் கடினமும் அதிகமாக நிமிர்ந்த சறுக்கு வழியாகச் செல்லுகின்றனர். வலதிடது என்பதை முயல் சரியாக உச்சரிக்கவில்லை. தவறாக உச்சரித்தது. இவ்வாறு செல்வது சலிப்பாக இருந்ததாகச் சொல்லுகிறது. முதல் நாளில் கொஞ்சம் கற்றிருந்தது. எனவே மிக விரைவில் அதிகமாகக் குதிக்க வேண்டும் என எண்ணியது. எவ்வாறு வலது இடதுபுறம் சாய வேண்டும் என மான் கற்பித்தது. கொஞ்சம் பயிற்சி பெற்றதும் முயல் கவிழ்ந்து படுத்துத் தூங்கியது. கற்கும் நேரம் வந்ததும் மான் 'என் பின்னே வா' என்று முயலிடம் கூறி முன் சென்றது. முயல் மானைப் பின்தொடராமல் வேகமாக ஓடி மானுக்கு முந்திக் கொண்டது. வேகத்தைக் குறைக்கும்படி மான் கத்தியது. மான் சொல்வதை முயல் கேளாமல் ஓடி தனது வேகத்தைக் கட்டுப்படுத்த இயலாமல் மரங்களிருக்கும் இடத்தில் சறுக்கி ஓடியது. 'ஐயோ!... மரங்கள்!' என்று வலது இடது புறமாக வளைந்து ஓடியது. முயல் இடறி மரங்களின்மேல் மோதி பனிக் குவியலில் விழுந்தது. மான் முயலருகில் சென்று முயல் எழும்ப உதவி செய்தது. ' என்ன அழகு உடை உனக்கு! நான் இன்று ஆமை பிடிக்கச் செல்ல வேண்டுமென்றிருந்தேன்' என்று கூறி, மயங்கி, தனது நாக்கை வெளித்தள்ளி விழுந்தது. முயலை மான் எழுப்பிவிட்டு, அதன் தலையிலிருந்த பனித்துளியை தட்டிவிட்டு சுத்தம் செய்தது. மான் சொன்னதைக் கேட்டிருக்க வேண்டும் என்று முயல் கூறிக் கொண்டது. மனதில் சிரித்துக் கொண்ட மான் 'என்னை நம்பி, நான் சொல்லும்படி செய்தால் ஒருநாள் நீ மலை உச்சி அடைவாய்' என்று கூறியது. தாங்கள் சரிவின் அடிவாரம் சென்றுவிடவும், முயல் தனது வேகத்தைக் கட்டுப்படுத்தப் படிக்க வேண்டும் எனவும் ஆலோசனை கூறியவாறு மேடையை விட்டுப் போகின்றனர்.

முக்கியப் பாடம்: தேவனைச் சேவி

V.B.S. யின் 'இலக்கு' பாடத்திற்கு வந்துள்ளோருக்கு வணக்கம். நாம் ஆவிக்குரிய மலைமேல் ஏறி தேவனுடைய பெரிய திட்டங்களை நமது வாழ்வில் பெற வந்துள்ளமையால் மகிழ்ச்சி. தேவன் நம் அனைவரையும் நேசிக்கிறார் என்பதை நாம் அறிவோம். மேலும் அவர் நமது வாழ்வின்மூலம் சிறப்பான எதையோ செய்ய விரும்புகிறார் என்பதையும், அதினால் இம்மலைமேல் நாம் ஏறுகிறோம் என்பதையும் அறிவோம். இது நமக்கு சில வேதனைகளையும் பாடுகளையும் வியர்வையையும் கண்ணீரையும் அளிக்கும் அனுபவங்களுக்கூடாக நம்மை நடத்தலாம். ஆனால் அது ஏற்புடையதே. இந்த மலையானது சற்று வேறுபட்டது என்பதை நாம் படிக்கிறோம். இப்பயணம் எப்படியிருக்க வேண்டுமென நாம் விரும்புகிறோமோ அதைவிட இது மாறுபட்டுள்ளது. நாம் மேலே ஏறுவதற்குப் பதிலாக கீழே இறங்குவதுபோல உணருகிறோம்.

வேதாகம வசனம்

"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்." யோவான்12:26

நாம் இந்த வாரத்தில் யோசேப்பை சந்திக்கிறோம். அவர் எதிர்பார்த்ததைப் போன்று வாழ்க்கையில் நடக்கவில்லை என்பதை நம்மிடம் பகிர்ந்து வருகிறார். யோசேப்பு தேவனிடமிருந்து சொப்பனங்களைப் பெற்றுக்கொண்டபோது, தன்னை ஒவ்வொருவரும் எவ்வாறு பணிந்து கொள்வார் என்று தனது வாழ்வில் விந்தையும், பெரிதுமானவற்றை தேவன் செய்வாரென்றும் நினைத்தார். ஆனால் அவர் கொடுமையாக நடத்தப்பட்டு அடிமையாக விற்கப்பட்டார். அடுத்து என்ன நடந்தது என நாம் கற்கப் போகிறோம். யோசேப்பு நம்பிக்கை

www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

இழக்காமல் வைக்கப்பட்ட இடத்தில் உண்மையுடன் பணிபுரிந்தார். உயர்வுக்கென காத்திருந்த காலத்தில் ஒன்றும் செய்யாமல் இருந்திருக்கலாம். ஆனால் நல்ல அடிமையாகச் செயல்பட்டார். நானும் நீங்களும் அவ்வாறே இருக்கவேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார்.

நமது வாழ்க்கையில் பெரிய காரியங்களை நிகழ்த்த ஒரு அழைப்பு நமக்கு இருக்கும்போது நாம் சிறு காரியங்களிலும் சிறப்பாகப் பணிபுரிய வேண்டும். நாம் துடைப்பம் ஒன்றை கையிலெடுத்து தரையைச் சுத்தம் செய்யத் தொடங்க வேண்டும். சபையின் எந்தப் பகுதியிலாயினும் சேவை செய்ய எழுந்திரு. தேவனுக்கு எங்கேயும், எந்த நேரமாயினும், எதிலும் பணிபுரி. உண்மையாயிரு. விட்டுவிடாதே. இது கடினமானதே! தேவன் நமக்குப் பெரிய காரியங்களை வைத்திருக்கும்போது சிறியனவற்றைச் செய்வது மிகக் கடினமானதே. ஆனால் அதுவே வழி. தேவனுடைய ஆளுகையில் கீழே செல்வதே மேலெழுவதற்கான வழி. நாம் இப்போது அடர்ந்த காட்டுப் பாசறைக்கு வந்துள்ளோம். தேவனுக்கு சேவை புரியும் மலைப்பகுதி இது.

‘தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்து போவான். என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் காப்பான்’ மத்தேயு 10:39.

சிறிய காரியங்களைச் செய்து கொண்டிருப்பதும், முக்கியமானவற்றில் ஈடுபடாமல் எளியனவற்றைச் செய்து கொண்டிருப்பதும் உள்ளத்தில் பயத்தை உண்டாக்கினும் அவற்றின்மூலம் தேவன் பயிற்சி அளிக்கிறார். தேவன் அவிற்றின்மூலம் சிறப்பானதை நிறைவேற்றுவார். நமக்கான பயிற்சியை நாம் பெற விரும்பினால் சிறு காரியங்களையும் செய்ய வேண்டும். நாம் நமது வாழ்வினை வெறுத்து யோசேப்பைப்போல பின்னோக்கிச் செல்ல வேண்டும். நாம் தேவனை சேவித்தால் ஒருநாளில் நமக்களித்த சொப்பனங்கள் நிறைவேறக் காணலாம்.

முக்கிய கருத்து

தேவனைச் சேவி

சுழற்சி முறை நிலையங்கள்

சிற்றுண்டிச் சிகரம் நாள் 3

நாம் உயரே செல்லும்போது பனித்துளிகளைக் காண்போம்

தேவையான பொருட்கள்
- வனிலா பிஸ்கட்டுகள்
- வெள்ளை வெண்ணெய் சர்க்கரை பசை.
- சிறிய பிளாஸ்டிக் பைகள் (4, 5 பேருக்கு 1 பை)
- சர்க்கரை
- ஊதா நிறமான உணவு நிறமிடும் பொருள்.

செய்முறை:
- வெண்ணெய் கலவை ஊற்றி பையை ஆயத்தம் செய்க. ஒரு முனையில் துளையிட்டுக் கொள்ளவும்.
- சர்க்கரைக்கு ஊதா நிறமேற்றவும்.
- படிக உருவில் பனித்துளிகளை உண்டாக்கவும். அதை பிஸ்கட் மேலிட்டு அழகு செய்து, மினுங்கும் ஊதா சர்க்கரையைத் தூவவும்.

யோசேப்பு போத்திப்பார் வீட்டில் பணிபுரிதல்
(ஆதியாகமம் 37:36, 39:1-6)

யோசேப்பு

வணக்கம்! என்னை நினைவிலிருக்கிறதா? நான் யோசேப்பு! மீண்டும் உங்கள் வகுப்பிற்கு வந்துள்ளேன். சிறுவர்களே! போன தடவை எனக்கு என்ன சம்பவித்ததென்று நான் சொன்னது நினைவிருக்கிறதா? எனது சொந்த சகோதரர் என்னை அடிமையாக விற்றுவிட்டனர். அவர்கள் என்னை விரும்பவில்லை என்பதை நான் அறிவேன். நாங்கள் அதிக சண்டையிட்டோம்; ஆனால் அது எல்லா குடும்பங்களிலும் நிகழ்வதே. ஆனால் அவர்கள் என்னை மீதியானியரிடம் விற்றுப் போடுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை.
நான் எகிப்திற்குக் கொண்டு போகப்பட்டு, பார்வோனின் தலையாரிகளுக்கு அதிபதியான போத்திப்பார் என்பவனிடம் விற்கப்பட்டேன். நான் எனது எஜமானுக்கு பணிவிடை செய்தேன். தேவன் என்மேல் கிருபை வைத்து எனக்கு உதவி செய்தார். இலகுவாக வேலை செய்து கொண்டிருந்திருக்கலாம். ஆனால் எனது திறமைக்கேற்ப எனது எஜமானுக்கு ஊழியம் செய்தேன். ஒரு வேலையும் அற்பமல்ல. சிறுவர்களே! எனது சொப்பனம் உங்களுக்கு நினைவிருக்கிறதா? வானிலுள்ள நட்சத்திரங்கள் எல்லாம் வந்து வணங்கினதாகக் கனவு கண்டவன் நான் தான். தேவன் எனக்குத் தந்த சொப்பனங்களுக்கு நேராக நான் சென்று கொண்டிருந்ததாக உணரவில்லை; மாறாக உண்மையிலே நான் பின்னோக்கிச் சென்று கொண்டிருப்பதாக உணர்ந்தேன்.

சிறிது காலம் சென்றதும் எனது எஜமான் என்னை கவனித்து, தனது சொந்த மெய்க்காப்பாளனாக எனது பதவியை உயர்த்தினார். நான் இன்னும் அடிமையே. ஆனால் எனக்கு பல பொறுப்புகள் இருந்தன. நான் அடிமையாக அந்நிய தேசத்தில் இருந்தும் தேவன் என்னை ஆசீர்வதித்துள்ளதாக உணர்ந்தேன்.

ஆசிரியர்

எங்கள் V.B.S. ற்கு வந்தமைக்காக நன்றி யோசேப்பு!
தேவனிடமிருந்து விசேஷ அழைப்பு பெற்றிருந்தும் அந்நிய நாட்டில் அடிமையாக நீர் இருந்தது வேதனையாயிருந்திருக்கும்.
இவ்விதமாக தேவன் செயல்படுகிறார். பெரிய காரியங்களைச் செய்ய தேவன் உங்களைப் பயன்படுத்த விரும்பினால் சிறு காரியங்களிலும் அவரைச் சேவிக்க வேண்டும். நாம் பிறருக்கு சேவை செய்ய விரும்புகிறோமா என்பதை தேவன் கவனிக்கிறார். நாம் பின்னோக்கிச் செல்வதுபோல் தோன்றினும் நாம் தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டும். ஏனெனில் அதுவே முன்செல்லுவதற்காக வழி.
யோசேப்பே! நீர் அடிமை நிலையிலும் தேவனை சேவித்திருக்கிறீர். கூட்டத்துக்குள்ளே தொலைந்து போனதாக உணருகின்றீரோ? நீர் யார் என்றும் உமது வாழ்வில் தேவன் அளித்துள்ள முக்கியத்துவம் இன்னதென்றும் ஒருவரும் புரியவில்லையே என்றும் நீர் உணர்ந்திருப்பீரல்லவா? (யோசேப்பு 'ஆம்' என்கிறார்).
நாம் மலை உச்சியினின்று நமது கண்களை நகர்த்தி, கையில் துடைப்பம் எடுத்து பெருக்கத் தொடங்குவோம். சிறு காரியங்களிலும் தேவனை சேவிக்க வேண்டும். பிள்ளைகளே! உங்கள் வாழ்வில் தேவனை சேவிப்பீர்களா?

விளையாட்டு குறிப்புகள்:

1. ஒருவர் ஆட்டத்தைத் தொடங்கட்டும்.
2. ஒரு தாளில் அவர் தலைப்பைப்பற்றிய குறிப்பையோ, படத்தையோ வரைவார்.
3. அந்த வார்த்தையை அபிநயத்துடன் செய்து காண்பிப்பார்.
4. முதலாவது சரியான விடையை யூகித்துக் கூறுபவர் வென்றவராவார் (அதிக மதிப்பெண் பெறும் குழு அல்லது தனிநபர் வென்றவராவார்).

தேவனை சேவிப்பதைக் குறிக்க அபிநயங்கள்
• குப்பைபொறுக்குகுவது
• தரையைச் சுத்தம் செய்வது
• பாத்திரம் கழுவுவது துணிகளை அடுக்குவது
• ஒரு பாடகர் குழுவில் பாடுவது
• தரையைத் தண்ணீரால் துடைப்பது
• ஒரு போதகருக்குப் பணிவிடை செய்வது
• குழந்தைகளுக்கு பாடம் கற்பிப்பது
• ஒரு வரிசையில் இறுதியில் நிற்பது
• பிறரை சபைக்கு அழைத்து வருவது • வாசலில் நின்று மற்றவர்களை வரவேற்பது
• கழுவின பாத்திரங்களை அடுக்கி வைப்பது

www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

விருப்பத் தேர்வு

விருப்பத் தேர்வு அட்டையின்முன் மாணவரைக் கூட்டுக. ஒவ்வொரு கேள்வியையும் பதிலாக அளிக்கப்பட்ட 2 தீர்வுகளையும் அறிமுகம் செய்க. தங்கள் அபிப்பிராயத்தை அட்டையில் குறிக்கும்படி செய்க. வசதிப்பட்டால் ஒட்டுத் தாளை அதன்மீது ஒட்டச் செய்யலாம். சரியான உத்தரவை நீங்கள் காண்பிக்க முயற்சிக்க வேண்டாம்.

அ) யோசேப்பு, போத்திப்பார் ஏவின வேலைகளை ஏற்று, தாழ்மையுடன் பணி செய்தது சரியான காரியமே.
ஆ) யோசேப்பு தான் முக்கியமானவன் என நடித்து, தன்மேல் தேவன் வைத்துள்ள திட்டம் இன்னது என்பதை விளக்கியிருக்க வேண்டும்.
நேர்காணலின்போது அவ்வாறு நடந்திருந்தால் வீட்டில் முக்கியப் பொறுப்பை இலகுவாகப் பெற்றிருக்கலாம்.

உறைபனி விளையாட்டு

1. பனிப் பந்து சுண்டிவிடுதல்
வெள்ளை பலூன்களில் தண்ணீர் நிரப்பவும். தங்களுக்கு கூட்டாளிகளைத் தேர்வு செய்து நேரெதிர் நின்று, பனிப்பந்தை முன்னும் பின்னும் வீசுதல். ஒவ்வொருமுறை வீசும் போதும் எறிபவர் ஒரு எட்டு பின்னுக்கு எடுத்து வைக்க வேண்டும். பனிப்பந்து உடையும்போது அந்த ஜோடி ஆட்டம் இழக்கும்.

2. பனிப்புயல் ஆட்டம்
ஒரு கொத்து வெள்ளை பலூன்களை பனிபோல உயரவிடுதல். மாணவர் 2 குழுக்களாக்கப்பட்டு, தரையிலுள்ள பலூன்களை ஊதி வரையப்பட்ட கோட்டிற்கு அப்பால் கொண்டு செல்ல வேண்டும்.

www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

கைவினைப் பாடம் நாள் 3

புத்தக அடையாள அட்டை

செய்முறை

1. புத்தக அடையாள அட்டை வடிவத்தை வெட்டி வைத்துக் கொள்ளவும். ஒவ்வொருவருக்கும் ஒரு அட்டை, ஒரு ரிப்பன், அல்லது சுருண்ட ரிபன், 2 பனித் துளிகள், 6 சுருள்கள் தரவும்.
2. புத்தக அடையாள அட்டைக்கு வர்ணம் தீட்டவும்.
3. பனித் துளிகள், சுருள்கள் ஆகியவற்றை ஒட்டவும்.
4. ரிபனை ஒரு ஓட்டையினூடே செலுத்தி, ரிபனின் இரு நுனியிலும் ஒரு பாசியைக் கோர்த்து, ரிபனில் ஒரு முடிச்சு போடவும். அட்டை கிழியாதபடி கவனம் செலுத்தவும்.

பனிச்சறுக்கு வகுப்பு

மாணவர் பயிற்சிப் பக்கங்கள்

மாணவர் பயிற்சிப் பக்கங்களை அவர்களுக்கு கொடுங்கள். புதிர்களைச் செய்க.
துண்டுத்தாளை மடித்து மனை வசனம் தெரியும்படி மணிக்கட்டில் கட்டிக் கொள்ளவும்.
ஒவ்வொரு மாணவனின் மணிக்கட்டியிலும் காண்பிக்கப்பட்டுள்ளபடி கட்டப்படவும்.
அவாகள் அதை அணிந்து கொண்டு வீடு செல்வர்.

விடைகள்



X அல்லது O குறையிடு விளையாட்டு
இது விளையாடும் நேரம்!
தனது நண்பனைத் தேர்வு செய்து, 6 விளையாட்டு விளையாடவும். 3x3 என்ற சதுரத்துள் நேரான, குறுக்கான, எதிரெதிரான 3 இடத்தையும் பெறுவோர் வென்றவர்.



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

4 தேவன்மீது உறுதி.

பனிக்கட்டி முகாம் / யோசேப்பு சிறைச்சாலையில் மறக்கப்படுதல்

ஆதியாகமம் 39:7 - 40:23

நாள் 4: காத்திருத்தல்

இன்று முயல் காத்திருக்கப் படிக்க வேண்டும். இது முயல் விரும்பாத காரியமாகும். சறுக்கு செய்யும் இடத்தின் அடிவாரப் பகுதியில் இருவரும் உள்ளனர். நாளை அந்த இடத்திலிருந்து புறப்பட வேண்டும். மான் சமையலில் ஈடுபட்டிருந்தது. இன்றே மலைமேல் ஏறவேண்டும் என்று முயல் மானிடம் கேட்டுக் கொண்டேயிருந்தது. இன்றல்ல, நாளை போகலாம் என்ற காரணம் கூறாமல் மான் தடுத்தது. மேலே போக முயல் மானிடம் வற்புறுத்தி கேட்கிறது. தனது காலில் வலியோ, புண்ணோ இல்லை என்று முயல் குதித்துக் குதித்துக் காட்டியது. ஆனால் மான் கவனியாதபோது, தனது காலை முயல் தடவி விட்டுக் கொண்டது. அன்றே சறுக்கு விளையாடச் செல்ல பிடிவாதம் செய்த முயல் குறை கூறத் தொடங்கியது. தான் சமையல் வேலையில் மானுக்கு உதவி செய்ய வருவதாக ஆசை காட்டினது மன்றாடியது. தனது சறுக்குக் கட்டைகளை வாசலில் கொண்டு வைத்து, மானை சோதனைக்குட்படுத்தியது முயல். மானோ சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தது. முயலின் சொற்களுக்கு இணங்கவில்லை. பல முயற்சிகள் செய்தும் மானை வெளியே அழைத்துச் செல்ல இயலாததால் முயல் வெறி கொண்டது. கோபத்தில் தனது பாதங்களைத் தட்டிக் கொண்டது. பின் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தது. தன்னையே சுற்றி சுற்றி வளைந்து, கடைசியில் தலை சுற்றி வீழ்ந்தது. பின்னர் மான் தன்னைப் பார்க்காதபோது முகத்தை சுளித்துக் கொண்டது. வட்டமிட்டு ஓடி ஓடிப் பார்த்து களைத்த முயல் மான் இனி மலை ஏறப் போவதே இல்லை போலும் என்று கூறிக்கொண்டே மூலையில் முடங்கிக் கொண்டது. மான் சூப்பை ஆயத்தம் செய்து, மேஜையில் வைத்துவிட்டு, 'சூப் குடிக்க வா!' என்று முயலை அழைத்தது. இறுதியில் நாம் ஏன் இன்று மலையேறப் போவதில்லை என்று முயல் மானிடம் கேட்க, 'இன்று காலநிலை மோசமாகவுள்ளது, மலையில் பனி மூடியுள்ளது; அது தெளிவானபின் போகலாம்' என்று மான் சொன்னது. 'ஓ! அதை நான் நினைக்கவில்லை' என்று முயல் கூறினது. மான் மௌனமாகச் சிரித்துக் கொண்டு, 'என்னை நம்பி, நான் சொன்னபடி செய்தால் ஒருநாள் மலை உச்சி போகலாம்' என்று கூறினது. 'சரி! நீ சொல்வது சரியே. நீ செய்வதை நீ அறிந்திருக்கிறாய் என நான் நம்பியிருக்க வேண்டும். இது சரியான நேரம் என நீ கூறும் வரை நான் காத்திருப்பேன்' என்றது முயல்.

முக்கியப் பாடம்: தேவன்மீது உறுதி

'இலக்கு' V.B.S. வந்தோர்க்கு வாழ்த்துக்கள்.
உங்கள் வாழ்வில் சிறப்பான திட்டங்களை தேவன் வைத்துள்ளார் என்பது உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? ஆம்! இது விந்தையானது. நாம் எவ்வாறு ஆவிக்குரிய மலையில் ஏறுகிறோம்? (பிள்ளைகள் பதில் சொல்ல நேரம் தரவும்) ஆம்! மலையேற்றம் என்பது மலையிறக்கமே. எனினும் நாம் கீழே இறங்கும்போது சோர்படையக் கூடாது. தேவன்மேல் நம்பிக்கையுடனிருக்க வேண்டும். ஒருநாள் நாம் மலையின் சிகரத்தில் போய்ச் சேருவோம்.
இந்த வாரம் நமது வகுப்பிற்கு யோசேப்பு வருகைதந்து நமது மேலேறும் பாதை எவ்வாறு கீழே செல்லும் என்பதை தமது வாழ்வின்மூலம் சாட்சியாகக் கூறுகிறார்.

வேதாகம வசனம்

"நம்முடைய ஆத்துமா கர்த்தருக்குக் காத்திருக்கிறது; அவரே நமக்குத் துணையும் நமக்குக் கேடகமுமானவர்." சங்கீதம் 33:20

முதலில் தேவன் அவருக்கு இரு பெரிய சொப்பனங்களைத் தந்தார். தேவன் அவரை மிகப் பெரிய நிலையில் வைத்து பயன்படுத்துவார் எனவும், அனைவரும் அவரைப் பணிந்து கொள்வார்கள் எனவும் காண்பித்தார். அவை நிறைவேறுமுன், அவர் ஒரு கிணற்றுக்குள் தள்ளப்பட்டு, அடிமையாக விற்கப்பட்டார். முதலில் அவர் தேவனை நம்பவும், பின்னர் அவரைச் சேவிக்கவும் வேண்டியதாயிருந்தது. முக்கியமல்லாத வேலைகளைச் செய்யும்படி நேர்ந்தது. அதன் பிற்பாடு என்ன நடந்தது என்று இன்று கற்றுக் கொள்ளப் போகிறோம். அவை இன்னும் மோசமானவை. அவர் அசட்டை பண்ணப்பட்டு மறக்கப்பட்டார்.

www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

மோசமானவையா? ஆம், தவறாக நடத்தப்படுவதைக் காட்டிலும் மறக்கப்பட்டுப் போவது கடினமான அனுபவம். யோசேப்பு சிறையில் போடப்பட்டார். அங்கேயே விடப்பட்டார். அவர் மறக்கப்பட்டார். தனது சேவையினால் எந்த மேன்மையும் கிட்டவில்லை. ஆனால் அவர் தேவனை நம்பினார்.

தேவன் நம்மேல் கரிசனையுள்ளவர். நீங்கள் சொப்பன விளைவை சுதந்தரிக்க தேவன் உங்களுக்கு பயிற்சியளித்து ஆயத்தப்படுத்த வேண்டியதாயிருக்கிறது. இது ஒரு ஒளி மேடையில் நடைபெறாமல், ஒருவரும் கவனிக்காத இடத்தில் நடைபெறும் ஒன்றாகும். காலம் கடந்துபோகும்போது உங்களில் அவர் கிரியை செய்கிறார். உங்கள் கனவிற்கும் சம்பவங்களுக்கும் சம்பந்தமின்றி இருப்பதாக உணரலாம். ஆனால் அது மெய்யன்று. தேவன் உங்களில் கிரியை செய்கிறார்.

துரதிஷ்டவசமாக இது பல ஆண்டுகளாக நடக்கலாம்.

இன்று யோசேப்பைப் பார்க்கும்போது, பல ஆண்டுகள் சிறையில் மறக்கப்பட்ட அனுபவம் எப்படி இருந்தது என்று கேளுங்கள்.

ஒருவரும் கவனிக்காமல் காத்திருப்பது மனதை சோர்வுறச் செய்யும். எனினும் நம்பிக்கையில் தளர வேண்டாம். தேவன் உங்களில் விசேஷமானதைச் செய்வார். நமக்காக தேவன் வைத்துள்ளதை சுதந்தரிக்க வேண்டுமானால் யோசேப்பைப்போல காத்திருத்தலில் விருப்பமுள்ளோராயிருக்க வேண்டும். தேவனை நம்பினால் நாம் கண்ட சொப்பனங்கள் நிறைவேறும்.



சுழற்சி முறை நிலையங்கள்

சிற்றுண்டிச் சிகரம் நாள் 4

மலையேற்றம் தாகத்தை உண்டாக்கும். பனிக்கட்டி சாறு தயாரிப்போம்.

தேவையான பொருட்கள்
- பெரிய கிண்ணம், குழிக்கரண்டி
- ஒரு பெரிய பாத்திரத்தில் ஹவாய் சாறு அல்லது ஊதா நிற சாறு
- 1, 2 லிட்டர் அளவான 7 அப் அல்லது ஸ்ப்ரைட்
- 2 கோப்பை அன்னாசி சாறு
- வனிலா ஐஸ்கிரீம் பனிக்கட்டி பந்து செய்ய.

செய்முறை
- சாறுகளையும் சோடாவையும் கலக்கவும்.
- அதின் மேலே வனிலா ஐஸ்கிரீமை விடவும்.

www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

யோசேப்பு

சிறுவர் சிறுமியரே வணக்கம்.
தலையாரிகளின் தலைவன் வீட்டில் அடிமையாக இருந்தேன். அது அதிக காலம் நீடிக்கவில்லை. ஏனெனில் அவன் மனைவி தவறாக என்னை குற்றப்படுத்தினாள். நான் சிறையிலடைக்கப்பட்டேன். சிறைவாசம் வேடிக்கையல்ல. அங்கே சிறைச்சாலைத் தலைவன் தந்த பொறுப்புகளைச் செய்து என்னை சுறுசுறுப்புடன் வைத்துக் கொண்டேன். ஒரு சிறைச்சாலைக்குள் பொறுப்பை பெற்றது விந்தையே. நான் சிறுவனாயிருக்கையில் கண்ட கனவு இதுவல்ல. நான் ஒருநாள் சிறைக்காவலனாக, பல பொறுப்புகளுடன் சிறைக்குள் இருப்பேன் என நான் கனவு காணவில்லை.
இல்லவே இல்லை! நான் வெளியே வர விரும்பினேன். காலம் கடந்தது. எல்லாரும் என்னை மறந்துவிட்டனர்.
ஒருநாள் அரசனின் ஊழியர் இருவர் சிறைக்கு அனுப்பப்பட்டு வந்தனர். அவர்கள் அரசனின் பானபாத்திரக்காரனும் சுயம்பாகியும். இதுவே நான் வெளிவரும் சந்தர்ப்பம் என நான் எண்ணினேன். தேவன் என்னைக் குறித்து கரிசனையுள்ளவர். அங்கே பெரிய தவறு நடந்தது. தேவன் என்னில் பெரிய திட்டம் வைத்திருந்தார். எனவே நான் இன்னும் சிறையிலிருக்க வேண்டியதில்லை. எப்படியெனில் இருவரும் ஒரு இரவில் சொப்பனம் கண்டனர். அவர்களுக்கு அதன் அர்த்தம் கூறி உதவினேன். பானபாத்திரக்காரன் 3 நாளில் மீண்டும் அரமனையில் பணிபுரிவான், 3 நாளில் சுயம்பாகியின் தலை வெட்டப்படும் என்பதே அதன் அர்த்தம்.

பானபாத்திரக்காரன் அரமனை திரும்பும்போது என்னை நினைத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டேன். நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை எனவும், நான் எனது சொந்த நாட்டை விட்டு வந்தவன் எனவும் சொன்னேன். இவை நல்ல அனுபவங்களல்ல. நான் விடுதலை பெற விரும்பினேன்.
எனினும் அனைவரும் என்னை மறந்தனர். காலம் கடந்தது.
நான் கூறினபடி பானபத்திரக்காரன் அரமனை திரும்பினான். ஆனால் அரசனிடம் என்னைக் குறித்துச் சொல்ல மறந்து போனான். மேலும் 2 ஆண்டுகள் சிறையில் அடைபட்டுக்கிடந்தேன். நான் மறக்கப்பட்டுப் போனேன்.
சிறுவர் சிறுமியரே! உண்மையிலேயே என் வாழ்வில் தேவன் பெரிய திட்டங்களை வைத்துள்ளார் என்பதை நான் அறிந்திருந்த போதிலும் சிறை அனுபவம் கடுமையாயிருந்தது. நான் தேவனை நம்பி காத்திருக்க வேண்டியதாயிருந்தது. நான் காத்துக் கொண்டிருந்தேன். தேவன் தாம் தந்த கனவுகளை என்றாகிலும் நிறைவேற்றுவார் என்று நம்பிக் கொண்டிருந்தேன்.

ஆசிரியர்

இந்த V.B.S. பள்ளியில் எங்களோடிருக்கும் யோசேப்புக்கு நன்றி! தேவனிடமிருந்து சிறப்பான அழைப்பை பெற்று முற்றிலும் மறக்கப்பட்டவனாய் சிறையில் அடைபட்டிருந்தது மிகவும் வேதனையாயிருந்திருக்கும். எனினும் தேவன் இவ்விதமாக கிரியை செய்கிறார். தேவன் பெரிய காரியங்களை நம்மூலம் நடப்பிக்க வேண்டுமானால், நாம் தொலைந்து போனது போலிருப்பினும், பிடிபட்டிருப்பினும், மறக்கப்பட்டுப் போயினும் அவரில் நம்பிக்கையுடனிருக்க வேண்டும். நாம் காத்திருக்கிறோமா, அவரில் நம்பிக்கையுடனிருக்கிறோமா என்று தேவன் நம்மை கவனித்துக் கொண்டிருக்கிறார். நாம் மறக்கப்பட்டு பின் தள்ளப்பட்டுப் போயினும், நாம் அவரை நம்ப வேண்டும். ஏனெனில் முன் செல்ல அதுவே வழி. யோசேப்பே! நீர் சிறையிலிருப்பினும் அவரை நம்பினீர். நீர் கூட்டத்திற்குள் காணாமற் போனதாக உணர்ந்தீரே! உம்மை ஒருவரும் அறியவில்லை எனவும், உமது வாழ்வில் தேவன் முக்கியத்துவம் வைத்துள்ளார் என்பதையும் உணர்ந்தீரா (யோசேப்பின் பதில் 'ஆம்').

நாம் நமது கண்களை மலை உச்சியினின்று விலக்கி தேவனின் நேரம் வருவதற்கு காத்திருப்பதில் விருப்பம் கொள்வோம். நாம் சிறு காரியங்களிலும் அவரை சேவித்து, காத்திருந்து தேவனை நம்ப வேண்டும். பிள்ளைகளே! நீங்கள் மறைந்து வாழும்போதும், மறக்கப்பட்டிருக்கும்போதும் தேவனை நம்புவீர்களா?



செயல்முறை

தாளில் ஒரு பொருளை செய்து அது தண்ணீரில் போடப்படும்போது எவ்வாறு செல்லுகிறது என்று கவனிக்கச் செய்யவும். இது தேவனுக்குச் சித்தமான நேரம் உண்டு என்பதையும், நாம் அவரில் நம்பிக்கை வைக்க வேண்டும் என்பதையும் குறிக்கும். நமது கனவுகளைப்பற்றி தேவனை நம்பலாம். அவை தண்ணீரில் ஓடும் தாளைப்போல, காத்திருக்கும்போது கைகூடும். பலவித தாள் படகுகளைச் செய்து தண்ணீரில் விடவும். வயதுக்கேற்ப செய்க. (படம் பார்க்க). ஒரு ஆற்றைப்போல செய்து வைக்கவும். ஒரு நீல நிறத் துணியை தண்ணீருக்கு ஒப்பனையாக வைக்கலாம்.



விருப்பத் தேர்வு

விருப்பத் தேர்வு அட்டையின்முன் மாணவரைக் கூட்டுக. ஒவ்வொரு கேள்வியையும் பதிலாக அளிக்கப்பட்ட 2 தீர்வுகளையும் அறிமுகம் செய்க. தங்கள் அபிப்பிராயத்தை அட்டையில் குறிக்கும்படி செய்க. வசதிப்பட்டால் ஒட்டுத் தாளை அதன்மீது ஒட்டச் செய்யலாம். சரியான உத்தரவை நீங்கள் காண்பிக்க முயற்சிக்க வேண்டாம்.

அ) யோசேப்பு சிறையினின்று வெளியே சென்ற பானபாத்திரக்காரனிடம் தொடர்பு கொண்டிருந்திருக்கலாம். காவற்காரர்மூலம் அவனுக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கலாம். இவ்வாறு முயற்சி செய்திருந்தால் இதைவிட விரைவில் சிறையினின்று விடுதலை பெற்றிருக்கலாம்.
ஆ) யோசேப்பு தனது பணியைப் பொறுமையுடன் செய்து காத்திருந்தது சரிதான். தனது இளம் வயதில் பெற்றக் கனவுகளை தேவன் கைகூடப் பண்ணுவார் என அறிந்து கொண்டு பொறுமையுடன் காத்திருந்தது சரியே.

உறைபனி விளையாட்டு

1. பனிப் பந்தைத் தேடுதல்
பஞ்சு உருண்டைகளை ஆங்காங்கே ஒளித்து வைக்கவும். அனைத்து உருண்டைகளையும் தேடிக் கொண்டு வர வேண்டும்.

2. பனிப் பந்தாட்டம்
இரு வரிசையில் குழுக்கள் நிற்பர். உறிஞ்சு குழலால் பஞ்சு பந்தை உறிஞ்சி எடுத்து கோட்டிற்கு அப்பால் கொண்டு செல்க. 5-10 பேர் ஒருநேரம் பங்கெடுப்பர். சிறந்தவர் தேர்வு செய்யப்பட்டு இறுதி சுற்றில் ஆடுவர்.

www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

கைவினைப் பாடம் நாள் 4

படச்சட்டம்

செய்முறை

1. Foam ஆல் ஒரு சட்டம் கொடுக்கவும். அதில் பின்புறம் பொருத்த ஒரு தாள் தரவும். மலை, பனித்துளிகள் இவற்றை வர்ணம் தீட்டவும்.
2. சட்டத்தின் மூன்று பக்கங்களிலும் பசையிட்டு தாள் ஒட்டவும். 4ம் பக்கத்தின் வழியாகப் படம் உட்செலுத்தப்படும்.
3. பட சட்டத்துக்குள் 'இலக்கு' என்று எழுதவும்.
4. 5 பனித் துளிகளை உள்ளே ஒட்டவும்.
5. சுருண்ட ரிபனை பின்புறம் ஒட்டி தொங்கவிட ஏதுவாக்கவும். கைவேலை உலர விடப்பட வேண்டும்.

பனிச்சறுக்கு வகுப்பு

மாணவர் பயிற்சிப் பக்கங்கள்

மாணவர் பயிற்சிப் பக்கங்களை அவர்களுக்கு கொடுங்கள். புதிர்களைச் செய்க. துண்டுத்தாளை மடித்து மனை வசனம் தெரியும்படி மணிக்கட்டில் கட்டிக் கொள்ளவும். ஒவ்வொரு மாணவனின் மணிக்கட்டியிலும் காண்பிக்கப்பட்டுள்ளபடி கட்டப்படவும். அவர்கள் அதை அணிந்து கொண்டு வீடு செல்வர்.

விடைகள்





உன் நண்பனுடன் அதிகப்படியான சதுரங்கள் பெற விளையாடு. புள்ளிகளை இணைத்து சதுரங்களை உருவாக்கி இருவரும் விளையாடலாம். ஒரு சதுரம் கோட்டினால் இணைத்து முடிக்கப்பட்டதும் தனது பெயரின் முதலெழுத்தை அதற்குள் எழுத வேண்டும். தனது முறை வரும்போது கோடிட வேண்டும். எல்லா கட்டங்களும் இணைக்கப்பட்டபின் அதிக கட்டம் நிரப்பியோர் யார் என எண்ணி கண்டுபிடிக்கவும். அவரே வெற்றியாளர்.



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

5 தேவனுக்கு நன்றி செலுத்து

சிகரம் / யோசேப்பின் கனவுகள் நிறைவேறுதல்

ஆதியாகமம் 41:14-40, 41:53-57, 42:1-6

நாள் 5: சிகரம்

இன்று மானும் முயலும் மிகக் கடினமான மலை உச்சி ஏறுகின்றனர். முயல் மிக ஆர்வத்துடனிருந்தது. தானும் மானும் தொடங்கின இடம் செல்லும்போது முயலுக்கு தன்னை அடக்கிக் கொள்ள முடியவில்லை; நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை.
சாதாரணமாகப் பார்க்கக் கூடிய மரத்தையும், மேகத்தையும் பார்த்து 'என்ன அழகு பார்!' என்று கூறினது முயல். பதிலாக மான், 'அது ஒருமரம்தான்' 'அது ஒரு பறவைதான். அது உனது கால்தான்' என்றது. முயல் தவறான வழியில் சென்றது. மான் அதைச் சரியான வழிக்குத் திருப்பியது. அந்தச் சரிவின் உச்சியிற் போய்ச் சேர்ந்ததும் சுற்றிலும் உள்ளவற்றை நன்கு பார்க்கவும். தாங்கள் ஏறிவந்த மலைப்பாதையைக் காணவும் முடிந்தது. இப்போது முயல் மிகவும் பயமடைந்தது; நடுங்கியது. கால் முட்டிகள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டன. வழியில் மலையின் மீதுள்ள முகடுகளையும், மரங்களையும், திருப்பங்களையும் பார்த்தது. இப்போது உச்சிக்குப் போக முயல் ஆயத்தமாக இல்லை. விரும்பவுமில்லை. 'அம்மா' என்று அழ ஆரம்பித்தது. 'இது நீ நெடுநாளாய் கொண்டிருந்த ஆசையல்லவா?' என்று மான் முயலுக்கு நினைவுபடுத்தியது. 'ஆனால் இது மிகக் கடினமாகத் தோன்றுகின்றதே' என்று முயல் பதிலளித்தது. மான் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டே 'என்னை நம்பி, நான் சொல்லுவதுபோல் செய். அப்போது உச்சியைப் போய் அடையலாம்' என்று சொன்னது. அவர்கள் கடந்து வந்த எல்லா சரிவுகளையும் மான் முயலுக்கு ஞாபகப்படுத்தியது. ஒவ்வொன்றும் எவ்வளவு கடினமாயிருந்தன. அவற்றையெல்லாம் சறுக்கி கடந்துவிட்டோம். குன்றுகளையும், மரக்காடுகளையும், திருப்பங்களையும் கடந்து விட்டோம்! எனக் கூறியதும் முயல் மீண்டும் தொடர ஆயத்தமானது. மான் சொல்வதைக் கேட்டு, அப்படியே செய்ய வேண்டுமென்பதே தேவையானது. மான் முயலுடன் சேர்ந்து வந்து எந்தெந்த இடங்களில் என்ன செய்ய வேண்டும் என கூறி நடத்துவேன் என்று சொன்னது. ஆயத்தமா? என்று மான் கேட்க, தயங்கியது முயல். அவர்கள் கீழ்நோக்கி இறங்கினர். 'இதோ நாம் போகிறோம்' என்று இருவரும் இணைந்து கத்தினர்.

முக்கியப் பாடம்: தேவனுக்கு நன்றி செலுத்து

இறுதிநாள் V.B.S. வகுப்பில் பங்குபெற வந்தோரை வரவேற்கிறோம். நமது வாழ்வில் தேவன் வைத்துள்ள பெருந்திட்டங்கள்பற்றி அறிந்து வருகிறோம். தேவனிடமிருந்து ஒரு காட்சியையோ கனவையோ பெற்றுக்கொள்வதும், அவை என்றாகிலும் நிறைவுறும் என்று அறிவதும் மிகவும் ஆர்வமூட்டும் அனுபவமாகும். இதில் உள்ள குறைவுயாதெனில் அது உடனே நிறைவேறும் என நினைப்பது. தேவனின் அழைப்பை பெற்ற முதல் வாரம் முதலே தேவனுடைய ஆசீர்வாதத்தை ஆர்வத்துடன் நோக்கியவாறு இருக்கிறோம். எப்போது தேவன் அதை நிறைவேற்றுவார் என எதிர்பார்த்து பொறுமை இழக்கிறோம்.
இந்த வகுப்புகளில் யோசேப்பைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். அவரது கனவுகள் உடனடியாக நிறைவேறவில்லை என அறிகிறோம். உண்மையைச் சொல்லப் போனால் தேவனிடமிருந்து சொப்பனங்களைப் பெற்றபின் இதுவரை அவர் கஷ்டங்களையும் சோதனைகளையும் தவிர வேறு எதையும் பெறவில்லை. அவரது சொப்பனத்திற்குப்பின் எத்தனை ஆண்டு வேதனை அனுபவித்தார் என நினைக்கிறீர்கள்? சிறுவர்களே! இன்று யோசேப்பை சந்திக்கும்போது இதைக் கேளுங்கள். தேவன் அவருக்களித்த ஆசீர்வாதங்களும் தலைமைத்துவமும் எங்கே?

வேதாகம வசனம்

"மகா சபையிலே உம்மைத் துதிப்பேன், திரளான ஜனங்களுக்குள்ளே உம்மைப் புகழுவேன்." சங்கீதம் 35:18

யோசேப்பைப் போன்றே, உங்கள் வாழ்விலும் தேவன் சில முக்கியத் திட்டங்களை உடையவராயிருக்கிறார். நாம் நமது உள்ளங்களையும் வாழ்வையும் அவருக்கு அளிக்கும்போது அவர் அவற்றைக் கையாண்டு அதிசயங்களைச் செய்கிறார். எனினும் நம்மில் தம் வேலையை முடிக்க ஆண்டுகள் செல்லலாம்.

www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

ஆம்! வாரங்களல்ல, வருடங்கள்!
அவரை விட்டு வெளியே இருப்போரைக் காட்டிலும் அவருக்குள் இருப்போரைக் குறித்து தேவன் அதிகக் கரிசனையுள்ளவர். நமக்குமுன் வைக்கப்பட்டுள்ள அநேக காரியங்களில் அவர் நம்மை பயிற்றுவிக்க விரும்புகிறார். நீங்கள் இணங்கினால் உங்கள்மூலம் அநேகர் ஆசீர்வாதம் பெறுவதை அவர் விரும்புகிறார். எனினும் தேவராஜ்ய வழி எப்போதும் கீழ்நோக்கியேயுள்ளது.
நாம் ஏறுகிறோம், உழைக்கிறோம், வியர்வை சிந்துகிறோம். நமக்கென அவர் ஆயத்தம் செய்துள்ள மலைச் சிகரத்தை எட்டுவதற்கு ஆண்டுகள் பல ஆகின்றன.
ஒரு அற்புதமான நாளில் அம்மலையின் உச்சியை அடைகிறோம்.
அங்கு நாம் சென்றதும் என்ன செய்வோம்? நெடுந்தூரம் நம்மைக் கொண்டுவந்த தேவனைத் துதிப்போம். அதன்பின் சுற்றிலும் கண்களை ஏறிட்டுப்பார்த்து மலைமுகட்டின் அழகினை நோக்குவோம். அக்காட்சி அருமையானது; அங்குள்ள காற்று மாசற்றது. தேவனை ஒரு கணம் துதிப்போம். எனினும் சுற்றிலும் உள்ளனவற்றைக் காணும்போது அங்கு ஒரு வியப்பு தோன்றுகிறது.
நீங்கள் இதை நம்பமாட்டீர்கள். ஏனெனில் மலை உச்சியிலிருந்து பார்க்கும்போது இன்னொரு மலை கண்ணில் படுகிறது. அதுசரி! ஒரு மலை உச்சியிலிருந்து பார்க்கும்போது மற்றொரு மலையின் அடிவார பாசறை காணப்படுகிறது. இதுவே எல்லையற்ற இலக்கு. நீங்கள் விரும்பினால் அவர் உங்களை அதற்கு நேர் இழுத்துச் செல்வார். நாம் கற்றுக் கொள்ளவும் வளரவும் தம் பக்கம் வைத்துக் கொள்வார். நமது முழு ஆயுசும் பெறும் வளர்ச்சியும் சாதனையும் பிறர் ஆசீர்வாதத்துக்கென அமையும். நாம் விட்டுவிடாதிருப்போம். தொடர்ந்து ஏறுவோம். தேவனின் எல்லையில்லா திட்டங்கள் நமது வாழ்வில் உள்ளன. மலையின் உச்சிக்காக ஒரு கணம் அவரைத் துதிப்போம். பின்னர் அவர் அடுத்த மலையினைக் காட்டும்போது அதில் ஏறுவதென்பது கீழ்நோக்கியே என்பதை மறக்க வேண்டாம்.

முக்கிய கருத்து

தேவனுக்கு நன்றி செலுத்து

சுழற்சி முறை நிலையங்கள்

சிற்றுண்டிச் சிகரம்

நாள் 5

நாம் இன்று உச்சியை அடைகிறோம்.
ஒரு மலைத்தொடர் அமைப்பதால் வழியெங்கும்கற்றுக் கொண்டவற்றை நினைவுபடுத்துகிறோம்,

தரப்பட வேண்டியன
வெட்டப்பட்ட தர்பூசனி, மலை அமைக்க நுரை வரும்படி அடித்த முட்டை

செய்முறை
மலை முகடுகளை தர்பூசனி கொண்டு அமைக்கவும். முகடுகளில் நுரை வர அடித்த முட்டையைப் பனிபோன்று அமைக்கவும்.

செய்முறை
தேவை
முட்டையை சமைத்துப் பொதிந்த ரொட்டி. இதை மலைச் சிகரம் போல வெட்டி அமைக்கவும்.
அவற்றின் மீது பாலாடைக் கட்டி, பீன்ஸ், அவோகேடா, புளித்த தயிர், ஆகியவற்றைப் பரப்பி பனிபோல் அமைக்கவும்.
மலைத் தொடர்களை ஏதாவது ஒரு தின்பண்டத்தால் உருவாக்கி, உங்கள் பகுதியில் எளிதில் கிடைக்கக் கூடிய பொருள்களால் மலை முகடுகளில் உறைபனி அமைக்கலாம்.

www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

வேதாகம மலை

யோசேப்பின் கனவுகள் நிறைவேறுதல்
(ஆதியாகமம் 41:14-40, 41:53-57, 42:1-6).

யோசேப்பு

சிறுவர் சிறுமியரே வணக்கம்!
இக்கடைசி V.B.S. வகுப்பில் உங்களுடன் இருப்பதில் மகிழ்ச்சி. உங்களுக்கு வேடிக்கையாக இருக்கிறதா? நான் இருந்த வண்ணமே இருக்கிறேன். நட்சத்திரங்களும் கதிர்க்கட்டுகளும் என்னை வணங்கியதாகக் கனவு கண்டபின் நான் அனுபவித்தவை கஷ்டமும் வேதனையுமே. தேவனுக்கும் எஜமானுக்கும் உண்மையாயிருக்க முயன்றபோது புதிய பிரச்சனைகள் தலைதூக்கின. தேவன் ஏன் இக்கனவுகளைத் தந்தார் என வியந்ததுண்டு. நான் 17 வயதாயிருக்கையில் அக்கனவுகளைத் தந்து எதிர்கால ஆசீர்வாதங்களைச் சொல்லி இத்தனை ஆண்டுகள் காத்திருந்தபின் என்ன நிறைவேற்றினார்?
பின்னர் எனக்கு 30 வயதாகையில் முடிவிலே ஒருநாள் அது நடந்தது. ஆசீர்வாதம் கிட்டியது. எத்தனை வருடம் நான் மேலே ஏறுவதற்குப் பதில் கீழ் இறங்கிக் கொண்டிருக்கிறேன்? கணக்கிட முடியுமா? தேவன் சொப்பனம் தரும்போது எனது வயது 17. அவை நிறைவேறும்போது 30 வயது (13 ஆண்டுகள் காத்திருப்பு). நான் சிறைச்சாலையில் விடுதலையின்றி பல பொறுப்புகளுக்கு மத்தியில் இருந்தபோது ஒருநாள் மத்தியானம் யாரோ ஒருவர் என்னைத் தேடி வந்தார்.
பார்வோன் இரு கனவுகளைக் கண்டிருந்தார். அவற்றிற்கு அர்த்தம் சொல்ல யாருமில்லை. அவரது கனவில் 7 கொழுத்த பசுக்களும், 7 மெலிந்த பசுக்களும், 7 செழுமையான கதிர்களும், 7 சாவியானவையும் இருந்தன. பானபாத்திரக்காரன் என்னை நினைவுகூர்ந்தான். என்னைக்குறித்துப் பார்வோனுக்கு அறிவித்தான். என்னைச் சிறைச்சாலையினின்று வெளியே கொண்டு வந்தனர். நான் குளித்து வஸ்திரம் மாற்றியபின் பார்வோனிடம் சென்றேன். சொப்பனங்களின் அர்த்தத்தை தேவன் சொல்லித் தந்தார்.
சொப்பனத்தில் 7 வருட செழிப்பும், 7 வருட பஞ்சமும் வரும் என்று பார்வோனிடம் கூறினேன். சிறுவர்களே! நடந்ததை நீங்கள் நம்பமாட்டீர்கள். என்னைப் பார்வோன் பெரிய அதிகாரியாக்கி பொறுப்புகளைத் தந்தார். எனது பாடுகள் முடிந்தன. உடன்தானே எனக்கு ஓர் அழகிய மனைவி கிடைத்தாள். ஒரு அருமையான வீடு, நான் கற்பனை செய்தது கிடையாது. 7 செழிப்பான ஆண்டுகளும் தானியங்களைச் சேகரித்தேன். பஞ்சம் வந்தது. பல நாடுகளிலும் பஞ்சம்; வறுமை. மக்கள் உணவுக்காக அங்குமிங்கும் அலைந்தனர். நாங்கள் மட்டுமே தேவையான உணவுப் பொருள் பெற்றிருந்தோம். நீங்கள் இதை நம்பமாட்டீர்கள். எனது சகோதரர் பலமைல் தூரம் ஆகாரத்துக்காக நடந்து எகிப்து வந்து சேர்ந்தனர். விதிக்கப்பட்ட அந்த நாள் வந்தது. அவர்கள் வந்து என்னைப் பணிந்தனர்.
பார்வோனுக்கு இரண்டாவதாக இருந்த எகிப்தின் அதிகாரி நான். இங்கே எனது சகோதரர் என்முன் பணிந்து கிடந்தனர்.
எனது கனவுகள் 20 ஆண்டுகளுக்குப்பின் பலித்தன. 13 ஆண்டுகள் பின்னோக்கிச் சென்ற ஆண்டுகள் மிகக் கடினமானவை.
எல்லா மக்களையும் பஞ்சத்தினின்று மீட்க என்னைப் பயன்படுத்தின தேவனுக்கு நன்றி. என்னை என் குடும்பத்துடன் இணைத்த தேவனுக்கு நன்றி.

ஆசிரியர்

மாணவரே! நம்மிடையே வந்து தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட யோசேப்பிற்கு ஒரு கைதட்டல் அளியுங்கள்.
உங்களுக்கும் எனக்கும் பெரிய கனவுகள் உண்டு. எனினும் அவை நிறைவேற 20 ஆண்டுகள் செல்லும் என நாம் நினைப்பதில்லை. ஆனால் அவை நிறைவேறும் என தேவனை நாம் நம்பலாம். அவைகளை நிறைவேற்றி இன்னும் அதிக நன்மைகளையும் தருவார். இதுவே எல்லையில்லா வாழ்வின் இலக்கு. நாம் விரும்பி இடம் கொடுத்தால் நம்மை உயரே இழுத்துக் கொண்டு, முன்னேறச்செய்து, நாம் கற்கவும் வளரவும் செய்வார். ஆகாரமற்ற நிலையில் யோசேப்பின் சொப்பனங்கள் முழுதேசத்தையும் ஆதரித்ததுபோல் நமது முழு ஆயுசும் பிறரை ஆசீர்வதிக்கவே செலவிடப்படட்டும்.
யோசேப்பே! இவ்வாரமும் நீர் எங்கள் மத்தியில் வந்தமைக்காக நன்றி.

www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

செயல்முறைகள்

இன்று சிறு கொடிகளை மாணவர் மலை உச்சியில் நாட்டுகின்றனர். மலைபோல படம் ஒன்றை வரைந்து வைத்து அதன் உச்சியில் ஏராளம் இடம் இருக்கும்படி அமைக்கவும். முக்கோண வடிவ கொடிகளை மாணவர் செய்யட்டும். கொடிகளுக்குக் கம்பம் தேவையில்லை. கொடிகள் தாளில் செய்யப்படட்டும். மாணவர் நன்றி சொல்லி ஜெபிக்க வையுங்கள்; அல்லது நன்றி ஆண்டவரே என்று சத்தமிட்டுச் சொல்லி, கொடிகளை மலை உச்சியில் நாட்டட்டும்.

விருப்பத் தேர்வு

விருப்பத் தேர்வு அட்டையின்முன் மாணவரைக் கூட்டுக. ஒவ்வொரு கேள்வியையும் பதிலாக அளிக்கப்பட்ட 2 தீர்வுகளையும் அறிமுகம் செய்க. தங்கள் அபிப்பிராயத்தை அட்டையில் குறிக்கும்படி செய்க. வசதிப்பட்டால் ஒட்டுத் தாளை அதன்மீது ஒட்டச் செய்யலாம். சரியான உத்தரவை நீங்கள் காண்பிக்க முயற்சிக்க வேண்டாம்.

அ) யோசேப்பு, தனது சகோதரர் செய்த தவறுகளை எடுத்துச் சொல்லி அவன்முன்னே சொப்பனத்தில் கண்டவாறு அடிபணிய வைத்திருக்க வேண்டும். அவனுக்கு அப்படிப்பட்ட சந்தர்ப்பம் அளிக்கப்பட்டமையால் இதைச் செய்திருந்திருக்கலாம்.
ஆ) பார்வோனிடம் கனவுகளின் அர்த்தத்தைச் சொன்னதும், தேசத்தை வரப்போகும் பஞ்சத்திற்கு ஆயத்தம் செய்ததும், அந்நிய நாட்டார் தன்னிடம் தானியம் பெற வந்ததும், அவர்களைப் பசியினின்று காத்ததும் சரியான காரியங்களே!



உறைபனி விளையாட்டு திருவிழா நாள்

பின்வரும் 5 விளையாட்டுகளையும் மாணவர் வெவ்வேறு நேரங்களில் விளையாடுவர். ஆட்டம் சிறப்புடன் அமைய கலந்து கொள்வோரிடம் டிக்கட் வசூலிக்கலாம்.
* காட்டு மான் கொம்புகளில் வளையங்கள் எறிவது
* முயலின் வயிற்றிலுள்ள ஓட்டைகளுக்குள் பனி உருண்டைகளைப் போடுதல். (பல துளைகள் போடவும். சிறு ஓட்டைக்குள் போடுவோர் அதிக மதிப்பெண் பெறுவர்)
* வெள்ளை வாளியில் தாளில் செய்த மீன்களைப் போட்டு, காந்தத் தூண்டிலால் பிடித்தல் (காந்தம் கவ்வுகிறதா என முதலில் சோதித்துக் கொள்ளவும்)
* காலி கோக் பாட்டில்களை பனிப் பந்து வீசி வீழ்த்துதல். பாட்டில் அல்லது டம்ளரை அழகுபடுத்திக் கொள்ளவும். தாள் பந்துகள் செய்து, அவை பாட்டிலை உருட்டுமா என சோதித்துக் கொள்ளவும்.
* யூகித்தல். ஒரு பெட்டியில் எத்தனை மிட்டாய்கள் உள்ளன என யூகித்தல்.



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

கைவினைப் பாடம் நாள் 5
பனிமலைக் காட்சி

செய்முறை
1. ஒவ்வொருவரிடமும் பனிமலைப் படம் கொடுத்து அதை வர்ணம் தீட்டச் செய்க. அதில் மரங்கள், மலைகள், மேகங்கள், மக்கள் ஆகியன இடம் பெறட்டும்.
2. ஒவ்வொருவரிடமும் 4 மேகங்கள், ஒரு பெரிய மரம், 2 சிறிய மரங்கள் கொடுக்கவும்.
3. இவற்றை ஒட்டுமுன் நேர்வாக்கில் நடுவில் மடித்து, மடிப்பில் பசையிட்டு 3னு தோற்றம் வரும்படி ஒட்டவும்.

பனிச்சறுக்கு வகுப்பு

மாணவர் பயிற்சிப் பக்கங்கள்

மாணவர் பயிற்சிப் பக்கங்களை அவர்களுக்கு கொடுங்கள். புதிர்களைச் செய்க. துண்டுத்தாளை மடித்து மனை வசனம் தெரியும்படி மணிக்கட்டில் கட்டிக் கொள்ளவும். ஒவ்வொரு மாணவனின் மணிக்கட்டியிலும் காண்பிக்கப்பட்டுள்ளபடி கட்டப்படவும். அவாகள் அதை அணிந்து கொண்டு வீடு செல்வர்.

விடைகள்





கதையை வாசிக்குமுன் உங்கள் வகுப்பிலுள்ள மாணவர்கள் தனது நண்பனுடன் சேர்ந்து வார்த்தைகளை நிரப்ப வேண்டும். கீழேயுள்ள நீலநிற பெட்டிக்குள் வார்த்தைகளை எழுதவும். பின்னர் கதையை சத்தமாக வாசிக்கவும். வார்த்தை கதையுடன் ஒத்துப்போக வேண்டாம்.

1. இடம் _____

2. பெயர்ச்சொல், பன்மை _____

_____நோக்கி மேலே செல்லுதல் ஒரு கிண்ணத்திலுள்ள
(இடம்)

_____ விட சுவாரஸ்யமானது. நீங்கள்
(பெயர்ச்சொல், பன்மை)

பெயர்ச்சொல்: ஒரு நபர், இடம், விலங்கு அல்லது பொருள் - பன்மை என்பது ஒன்றிற்கு மேற்பட்ட எண்ணிக்கையுள்ளது.
உரிச்சொல்: ஒரு பெயரை வர்ணிக்கும் சொல். பெரிய, அற்பத்தனமான, வளமான
வினைச்சொல்: ஒரு செயலைக் குறிக்கும் சொல். பாடு, சாப்பிடு, ஓடு.

www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

இந்த V.B.S.க்கான முழு நிரலையும் இலவசமாகப் பதிவிறக்கம் செய்யவும். இவை அனைத்தும் எங்களது "Destination Without Limits" என்ற இணையதளத்தில் உள்ளது.

www.ChildrenAreImportant.com/destination

மெக்ஸிகோவில் 52-592-924-9041
என்று முகவரியிலுள்ளோம்.
info@ChildrenAreImportant.Com

எளிதானது. 4-6 வயதினருக்கு, வாசிக்க வேண்டாம்.

நடுநிலையானது 7-9 வயதினருக்கு, சிலவற்றை வாசிக்க வேண்டும்.

கடினமானது 10-12 வயதினருக்கு, வாசித்தல் மற்றும் கடினமான புதிர்கள்.

சிறுவர்கள் முக்கியமானவர்கள்

மாணவரின் செயல்முறைப் பக்கங்கள்

தாளின் இருபக்கங்களிலும் மாணவர் செய்யவேண்டிய செயல்முறைகள் கொடுக்கப்பட்டுள்ளன. புதிர்கள் முடிக்கப்பட்டதும், அதை மடித்து, மாணவரின் மணிக்கட்டில் காப்புபோல சுற்றிக் கட்டவும். அதன்மேலே மனனவசனம் எழுதப்படவும்.

அழைப்பிற்கு

இந்த விபிஎஸ் சிறப்பாக நடைபெற போஸ்டரை உங்கள் சுற்றுப்புறத்தில் தொங்கவிடுங்கள்!

இயக்குநர் கையேடு

இந்த ஒரே புத்தகத்தில் இந்த பாடம்பற்றிய எல்லா விவரங்களையும் காணலாம். செயல்திட்டம், தன்னார்வத் தொண்டர்கள், பாடல்கள் மேலும் கூடுதலான ஆலோசனைகள்.

குறிப்பேடு

V.B.S. பள்ளியைச் சார்ந்த எல்லா குழுத்தலைவரிடமும் ஒவ்வொரு பாடத்திற்கான விவரம் அடங்கிய இச்சிறு புத்தகம் கொடுக்கப்படவும்.

அழைப்பிதழ்

இந்த அழைப்பிதழ்மூலம் அநேக சிறுவர்களை விபிஎஸ் க்கு அழைத்து இயேசுவைப்பற்றிக் கூறுங்கள்.



மிஷன் பெட்டி

உங்கள் பிள்ளைகள் தேவசெய்தியைத் தூதாகக் கொண்டுசெல்ல ஆர்வமூட்டுங்கள்.
• 5 நிற சுவரொட்டிகள்
• 5 செயல்முறை தாள்கள் - வெவ்வேறு மொழிகளில் பணித்தளங்களுக்கு அனுப்ப ஒரு பொருளுதவிப் பெட்டி

பாடல் C.D.யும் D.V.D.யும்

இந்த V.B.S. சம்பந்தப்பட்டுள்ள பாடல்களையும், நடனங்களையும் பார்த்து மகிழ்ச்சியடையுங்கள். பாடல்களை பதிவிறக்கம் செய்க. நடனக் காட்சிகளை யூ-ட்யூபில் காண்க.

இந்த முறை பாடல்கள் ஆங்கில, ஸ்பானிய மொழிகளில் மட்டுமே உள்ளன.

விருப்பத்தேர்வு பெட்டி

இதிலுள்ள சுவரொட்டிகள்மூலம் மாணவர் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கவும்.

சான்றிதழ்

விபிஎஸ் ல் பங்கெடுத்தற்காக சிறுவர்களுக்கு இந்த சான்றிதழ் கொடுத்து உற்சாகப்படுத்துங்கள்.

கைவேலைகள்

சிறுவர் கைவேலை செய்ய விரும்புவர். இந்த V.B.S. 5 தொகுதிகளுக்கான கைவேலைகளை அறிமுகம் செய்கிறது. ஒரு நாளைக்கு ஒன்று வீதம் எடுத்துக் கொள்ளவும். ஒவ்வொரு நாள் பாடத்தையும் விருப்புடன் கற்க, மனதிலிறுத்த, உங்கள் அருகேயுள்ள கடைகளில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டே தயாரிக்கும்படி வழி வகுக்கவும்.

பெரிய பின் திரை

Pdf ஐ பதிவிறக்கம் செய்து அச்சடிக்கப்பட்ட பின்திரையைக் காணவும். அளவு 4 மீட்டர் x 2 மீட்டர் அல்லது 3 மீட்டர் x 1.5 மீட்டர். எங்கள் இணையதளத்தில் இன்னும் அநேக உபகரணப் பொருட்கள் உள்ளன. காணவும்.





www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

வெற்றி வீரராக ஆயத்தமா?

www.ChildrenAreImportant.com/champions

Manual Destination
Tamil
40002

www.ChildrenAreImportant.com
info@childrenareimportant.com
We are located in Mexico.
DK Editorial Pro-Visión A.C.

சிறுவர்கள்
முக்கியமானவர்கள்